Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS


The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 பங்குனி – 13 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஸபர் 15 (26.03.2005) சனி க்கிழமை இதழ்:178

# பொதுக்கட்டமைப்பு முயற்சிகளில் முன்னேற்றமே காணப்படுகிறது!



## அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிப்பு

(கொழும்பு)

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை விரைவில் தொடங்குவதற்கான சாத்தியங்கள் தற்போது இல்லையெனவும், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்கும் வகையிலான பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதே அரசாங்கத்தின் தற்போதைய நோக்கமெனவும் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

விடுதலைப் புலிகளுக்கு அரசு என்ற அங்கீகாரத்தை வழங்காது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்குவதற்காக நோர்வேயின் அனுசரணையுடன் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி செய்துவருகிறது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்படுத்தப்படவுள்ள பொதுக்கட்டமைப்புக்கும் புலிகளால் முன் வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக அதிகாரசபைக்கும் எவ்வித தொடர்புமில்லை. இவை இரண்டும் முழுவதுமாக வேறுபட்ட அம்சங்களாகும்.

புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை, அதிகாரப் பரவலாக்கம், நிறைவேற்று அதிகாரங்கள் மற்றும் நிதி தொடர்பாக பேசப்படுவதென்பது அரசியல் நடைமுறை. ஆனால், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியளிக்கவென உருவாக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்பானது, அரசியல் கலப்படமற்ற, வரையறைக்குட்பட்ட அதிகாரங்களைக் கொண்ட நிர்வாக நடைமுறையாகும். (12 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்தம் ஏற்பட்டதன் பின்னர் 10 ஆயிரம் புதிய படையினர் சேர்ப்பு!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்ட பின்னர் - பத்தாயிரத்துக்கும் அதிகமான படையினர் மற்றும் அதிகாரிகள் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பதாக இரா ணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டும் செய்திகள் தெரிவித்தன.

2002 ஆம் ஆண்டு போர்நிறுத்த உடன்பாடு அமுலுக்கு வந்த பின்னர், வருடம் தோறும் இரண்டு தடவைகள் இராணுவ ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றன. இதன்போது ஒவ்வொரு தடவையிலும் - ஆயிரம் முதல் இரண்டாயிரம் பேர் வரையில் புதிதாக படையில் சேர்க்கப்பட்டனர்.

அதுமட்டுமன்றி வருடத்தில் இரண்டு தடவைகளில் - இராணுவ அதிகாரிகளுக்கும் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன என்றும் -

இவற்றின் மூலம் இந்தக் காலப் பகுதியில் 10 ஆயிரம் புதிய படையினரை இராணுவத்தில் சேர்த்துக்கொள்ள முடிந்திருப்பதாகவும் இந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(தே)




## சுனாமி பொதுக்கட்டமைப்பு பாதகத்தை ஏற்படுத்தாது!

### ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுகிறார்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கை புனரமைப்பதற்கு உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பு - இடைக்கால நிர்வாக சபையோ அல்லது நாட்டுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய நிறுவனமோ அல்ல. அது பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மறுசீரமைக்கும் கட்டமைப்பு மாத்திரமே என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தொகுதி அமைப்பாளர்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகள், பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தகுந்த பதவி வழங்கினாலேயே

## சத்திர சிகிச்சை வகுப்புக்களை

மேலும் தெரிவித்தன். (தே)

வாக சபையோ அல்லது நாட்டுக்கு யில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி ச (12 ஆம் பக்கம் பார்க்க)

# தகுந்த பதவி வழங்கினாலேயே கிழக்கு பல்கலைக்கு செல்வேன்!

## நரம்பியல் நிபுணர் குணானந்தன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில், தகுந்த பதவிநிலை ஒன்று வழங்கப்பட்டால் மட்டுமே தான் அங்கு இடமாற்றம் பெற்றுச்செல்ல இணக்கம் தெரிவிப்பேன் என்றும், இல்லையேல் தொடர்ந்தும் யாழ். மண்ணிலேயே மக்களுக்குச் சேவையாற்ற விரும்புவதாகவும் நரம்பியல் நிபுணர் குணானந்தன் நமது ஈழநாடுக்குத் தெரிவித்தார்.

யாழ். மருத்துவபீடத்தில் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியைத் தீர்ப்பதற்கு நரம்பியல் நிபுணர் குணானந்தனுக்கு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பொருத்தமான பதவி ஒன்றைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் வாய்ப்பிருப்பதாகவும், அதற்கு அவர் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுத் தலைவர் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக நரம்பியல் நிபுணர் குணானந்தனுடன் தொடர்பு கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில் -

வெளிநாடு ஒன்றில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது இங்குள்ளவர்களின் அழைப்பின்பேரில் எனது பணிகள் அனைத்தையும் நிறுத்திவிட்டு 1997 ஆம் ஆண்டு இங்கு வந்தேன். எனவே, கிழக்கு பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு பணியாற்ற என்னை அனுப்புவார்களேயானால், தகுந்த பதவி வழங்கும் பட்சத்திலேயே அங்கு செல்ல இணக்கம் தெரிவிப்பேன்.

இந்த விடயம் தொடர்பாக எனக்கு எந்த முடிவும் இதுவரை அறிவிக்கப்படவில்லை. எனது நிரந்தர நியமனம் யாழ். பல்கலைக்கழகத்திலேயே உள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## அநாதரவான நிலையில் செங்கடலில் 137 இலங்கையர்!

(கொழும்பு)

எகிப்தின் செங்கடல் எல்லைப் பகுதியிலுள்ள ஹலயேப் மற்றும் ஷலாரீன் பகுதிகளில் 137 இலங்கையர்கள் அநாதரவாக விடப்பட்ட நிலையில் இருப்பதாக எகிப்திய அதிகாரிகள் இலங்கைத் தூதரகத்துக்கு அறிவித்துள்ளனர்.

எகிப்திய தலைநகர் கெய்ரோவில் இருந்து 500 கிலோ மீற்றர் தொலைவில் தம்மை இலங்கையர் என்று கூறும் 137 பேர் தங்கியிருப்பதாக எகிப்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து வெளிவிவகார அமைச்சின் (12 ஆம் பக்கம் பார்க்க)

# சத்திர சிகிச்சை வகுப்புக்களை விரைவில் ஆரம்பிக்க முடியும்!

## நம்பிக்கை தெரிவிக்கிறார் துணைவேந்தர்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மென்டிசைச் சந்தித்துப் பேசிய பின்னர் - மருத்துவபீட சத்திரசிகிச்சை வகுப்புக்களை மீளவும் ஆரம்பிப்பதற்கான சாத்தியங்கள் தோன்றியிருப்பதாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ.மோகனதாஸ் தெரிவித்தார்.

நேற்று யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் அலுவலகத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் மருத்துவபீட பீடாதிபதி டொக்டர் சிவபாலன், சர்வதேச தமிழீழ மாணவர்பேரவை இணைப்பாளர் கண்ணன், மருத்துவ பீட மாணவர் ஒன்றியத் தலைவர் காண்டீபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

துணைவேந்தர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைக் கட்டியெழுப்புவதற்கு நரம்பியல் நிபுணர் வி.குணானந்தனை ஒப்பந்த அடிப்படையில் அங்கு செல்லுமாறு பல்கலைக்கழகங்களின் மானிய ஆணைக்குழுத் தலைவர் கேட்டுக் கொண்டதாகவும், இதற்கு நரம்பியல் நிபுணர் வி.குணானந்தன் இணங்கியுள்ளதாகவும் பேராசிரியர் மென்டிஸ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



போர்நிறுத்தம் வராமப்? போனா இவ்வளவு பேரைச் சேர்த்திருப்பினமோ...!


இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...

EXPOAIR

Your friend in the skies...

# பங்குனி மூன்றாம் திங்களன்று குடியமர அனுமதி பெற்றுத் தருக

## மறவன்புலவு சனசமூக நிலையம் கோரிக்கை

(யாழ்பபாணம்)

மிதிவெடிகள் அகற்றப்பட்ட வயல் வெளிகளில் மறவன்புலவு மக்களை இம்மாதம் 28ஆம் திகதி மீளக் குடியமர அனுமதி பெற்றுத் தருமாறு, மறவன்புலவு பாரதி சனசமூக நிலை யத்தினர் மனித உரிமைகள் அமைப் பிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக பாரதி சனசமூக நிலையம் அனுப்பி வைத்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மறவன்புலவு வயல் வெளிகளில் மிதிவெடிகள் அகற்றப்பட்டுவிட்டது என ஊடகங்களூடாகவும், எமது பகுதி மக்களும் நேரிலும் கண்டுள்ள னர். எமது பிரிவு மக்கள் பரம்பரை யாக இந்த வயல்களிலே ஒன்றித்து வாழ்ந்தவர்கள், எனவே, மிதிவெடி கள் அகற்றப்பட்ட மறவன்புலவு வயல்வெளிப் பகுதியில் எமது புனித மாதமாகிய பங்குனி மாதம் மூன் றாம் திங்கள் கிழமையாகிய நாளை மறுதினம் மீளக்குடியமர அரசிடமும் படையினரிடமும் அனுமதி பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகளை ஐ.நா வின் யாழ்.மாவட்ட இணைப்பாளர், யாழ்.மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு, தமிழ்த்தேசியக் கூட் டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ், பிரதேச செயலர், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.மாவட்டத் தலைவர் ஆகியோ ருக்கும் அனுப்பியுள்ளனர்.

## வாள் வெட்டுக்கு இலக்காகிய இருவர் யாழ். ஆஸ்பத்திரியில்

வாள் வெட்டுக்கு இலக்காகிய இருவர் படுகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள னர்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் பண்டத்தரிப்பில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் பிரான்பற்று பண்டத்தரிப்பைச் சேர்ந்த தெய் வேந்திரம் - பாலச்சந்திரன் (வயது 27) அமிர்தலிங்கம் இராசலிங்கம் (வயது 29) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் வைத் தியசாலையில் சிகிச்சை பெற்றுவரு கின்றனர்.

இச்சம்பவம் பற்றிமேலும் தெரிய வருவதாவது -

இரு சாராருக்கிடையில் காசுக் கொடுப்பனவில் பலநாட்கள் இருந்து வந்தபகைமை சம்பவதினம் மோத லாக மாறியவேளை இருசாராரும் மாறிமாறி வாள்வீச்சில் ஈடுபட்ட வேளையே இருவரும் காயமடைந் தாகத் தெரியவருகிறது.

மேற்படி சம்பவம் தொடர்பாக வைத்தியசாலை பொலிஸார் விசா ரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## யாழ்.கல்வி வலய சைவநெறி ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத் துக்குட்பட்ட பாடசாலைகளின் தரம் 9 இல் சைவநெறி கற்பிக்கும் ஆசிரி யர்களுக்கான செயலமர்வு ஒன்று இன்று காலை 8.30 மணி முதல் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இன்று பிற்பகல் 4.30 மணி வரை நடைபெறவுள்ள இச் செயல மர்வில் யாழ்.வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் தரம் 9 இல் சைவ நெறி கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடத் திட்டம், ஆசிரிய கைநூல், எழுது பொருட்கள், பாடநூல், மதிய உணவு என்பவற்றுடன் தவறாது சமுகமளிக் குமாறு யாழ்.வலய கல்விப் பணிப் பாளர் கேட்டுள்ளார். (58)

## சுனாமியால் பாதிப்படைந்த மாணவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வு

உயர்கல்வி நிறுவனங்களில் கல்விகற்கும் சுனாமியால் பாதிக்கப் பட்ட, பொருளாதார நெருக்கடியிலுள்ள 25 மாணவர்களுக்கு துவிச் சக்கரவண்டி வழங்கும் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு சர்வ தேச மாணவர் பேரவையில் மாண வர் பேரவையைச் சேர்ந்த இ.புவி ராஜ் தலைமையில் இடம்பெற வுள்ளது.

இந் நிகழ்வில் துவிச்சக்கர வண்டி களுக்காக பதிவினை மேற்கொண்ட மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட இருபத்தைந்து மாணவர்களையும் கலந்துகொண்டு துவிச்சக்கர வண்டி களைப் பெற்றுச்செல்லுமாறு அறி விக்கப்பட்டுள்ளது. அத்தோடு இந் நிகழ்வில் விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்கள் மற்றும் கல்விச் சமூகத் தைச் சேர்ந்தவர்கள் மற்றும் புலம் பெயர் தமிழ் உறவுகள் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## வாசகர் நோக்கு

### வேலைவாய்ப்பு வழங்குவதில் இப்படியும் மோசடியா?

வட - கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்குடன் இருபது வகையான பதவிகளுக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந்தப் பதவிகளுக்கு பட்டதாரிகளை உள்வாங்குவதற்கு போட்டிப் பரீட்சை ஒன்று நடைபெறவுள்ளது என்றும், இந்தப் பதவிகளுக்கு விண் ணப்பிக்கும் பட்டதாரிகள் மூன்று பதவிக்கு விண்ணப்பிக்க முடியுமெனவும் அத்துடன் ஒவ்வொரு பதவி வெற்றிடத்துக்கும் தனித்தனியாக விண் ணப்பங்கள் அனுப்ப வேண்டும் எனவும் வட-கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழ அறிவித்துள்ளது.

இதே பதவிகளுக்கு பட்டதாரிகளை நியமிப்பதற்கென வட-கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணசபை பொதுச் சேவை ஆணைக்குழுக்களும் விண்ணப்பங்களைக் கோரியுள்ளன. சில மாகாணசபை பரீட்சை கட்டணம் இன்றியும், சில மாகாணசபை குறைந்த பரீட்சைக் கட்டணத்துடனும் விண்ணப்பங்களை கோரியுள்ளது.

ஆனால் வட - கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு மட்டும் பரீட்சைக் கட்டணமாக இருநூறு ரூபாவும், ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியாகவும், விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் எனவும் கோரியுள்ளது. இதன்படி மூன்று பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் பட்டதாரி ஒருவர் பரீட்சைக் கட்டணமாக மட்டும் அறுநூறு ரூபா செலுத்த வேண்டியுள்ளது.

வட - கிழக்கு மாகாணத்தில் மட்டும் பட்டதாரியாக நியமனம் வழங்கும் நடைமுறையில் இவ்வாறு பாரபட்சம் காட்டுவது ஏன்? ஏனைய மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு பின்பற்றும் நடைமுறைகளைப் போன்று வட - கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் ஏன் பின்பற்ற முடிய வில்லை?

பட்டதாரிகளை உள்வாங்கும் நடைமுறையில் வட - கிழக்கில் பின்பற்றும் முறைகேடுகள் குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினர்கள் தலையிட்டு உரிய நிவாரணங்களைப் பெற்றுத் தருவார்களா?

யாழ்ப்பாணம் பாதிக்கப்பட்ட பட்டதாரி

## கன்ரரிலிருந்து வீழ்ந்தவர் படுகாயம்

ஓடிக்கொண்டிருந்த கன்ரர் வாக னத்தில் இருந்து தவறி விழுந்தவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று காலை 9.30 மணியள வில் வேலணையில் இடம்பெற் றுள்ள இந்தச் சம்பவத்தில் நாவாந் துறையைச் சேர்ந்த செல்லத்துரை தவராஜா (வயது 26) என்பவரே படு காயமடைந்தவராவார்.

கட்டட வேலை செய்யும் தொழி லாளர்களை யாழ்ப்பாணத்திலிருந்து வேலணைக்கு கன்ரர் வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சென்றபோது வானில் இருந்து தவறி வீழ்ந்ததில் இவர் படுகாயமடைந்ததாகத் தெரிய வருகின்றது.


சிறு விளம்பரம்

தேவை

பிள்ளையார் ஸ்ரோர்ஸ் நிறுவ னத்திற்கு கூலியாட்கள் தேவை. உடன் தொடர்புகொள்ளவும். ஓஸ் மானியா கல்லூரி வீதி, ஓட்டுமடம். T.P: 4590008.

(1103)

நாகம்ஸ் சுன்னாகம்
சில தினங்கள் மட்டும்
சூர்யா, ஜோதிகா நடித்த
மாயாவி
கா.நே. 11.00, 3.00, 7.00, 10.00

மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
பார்த்தீபன், காவேரி, மாஸ்ரர், அஸ்வின் மற்றும் பலர் நடித்த
(சிறந்த குடும்ப காவியம்)
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30, (பு.நே)

நிறைஞ்சனாஸ்
சிம்பு (இருவேடம்)
ஜோதிகா நடித்த
மன்மதன்
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
இன்று மட்டும்
குளிரூட்டப்பட்டது
THE PASSION OF THE CHRIST
(இயேசுநாதரின் இறுதி 12 மணி நேரக் கதை)
26.3.2005 முதல் விஜயகாந் செந்தில் நடித்த நிறைஞ்ச மனசு
கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30 (சி-3857)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந், வடிவேல், மும்தாஜ்
லண்டன்
இயக்கம்: சுந்தர்.C
ரிக்கெற்முற்பதிவு செய்துகொள்ளலாம்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்
(சி-3859)


## யாகப்பர் ஆலய நூற்றாண்டு விழா; பசான் வாசிப்புப் போட்டி முடிவுகள்

(கொக்குவில்)

குருநகர் புனித யாகப்பர் ஆலய திருஇருதய சபையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இவ்வருடம் பங்கு மட்டத்தில் நடத்தப்பட்ட பசான் வாசிப்புப் போட்டிகளில் வெற்றி பெற்ற வர்களின் விபரங்கள் அறிவிக்கப் பட்டுள்ளன.

அதேவேளை வெளிப்பங்குக் கான பசான் வாசிப்புப் போட்டிகள் கடந்த 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றமையும் குறிப் பிடத்தக்கது.

நடைபெற்று முடிந்த போட்டிக ளின் முடிவுகள் கீழே தரப்படுகின் றன.

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம்: அல்போன்ஸ் தனுசன், இரண்டாமிடம்: செல்வன் மெலிற்றஸ்

**மத்திய பிரிவு**

முதலாம் இடம்: கு.மேரி ஜசிந்தா, இரண்டாமிடம்: ம.மேரி சகானா, மூன்றாமிடம் அ.பிறின்சியா.

**சிரேஷ்ட பிரிவு**

முதலாமிடம்: ஜயானி பிலிப், இரண்டாமிடம்: இ.ராஜ்றெனுசியா, மூன்றாமிடம்: அருளப்பு றோய் மித்தி ரோன்.

**பொதுப்பிரிவு**

முதலாமிடம்: மடோனா மரிய தாஸ், இரண்டாமிடம்: திருமதி அரு ளப்பு ஜசிந்தா.

அண்ணாவியார் அ.மனோகர னின் நெறியாள்கையில் நடைபெற்ற மேற்படி போட்டிகளுக்கு அருட் தந்தை அ.பி.ஜெயசேகரம், அதிபர் ம.செபஸ்தியாம்பிள்ளை, முன்னாள் அதிபர் அல்பிரட் ஆகியோர் நடுவர்க ளாக கடமையாற்றினர். (206)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்

(யாழ்ப்பாணம்)

எதிர் எதிரே வந்த இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளா னதில் ஒருவர் காயமடைந்த நிலை யில் யாழ்.போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் கைதடியில் இந் தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கொடிகாமத் தைச் சேர்ந்த எஸ்.மகேந்திரன் (வயது 46) என்பவரே தலையிலும் கையிலும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

சம்பவதினம் யாழ்ப்பாணத்தி லிருந்து கொடிகாமம் நோக்கிச் சென்று கொண்டிருந்தவேளை, எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதிய தாலேயே இவர் காயமடைந்துள் ளார்.

இதேவேளை இவருடன் மோதிய மற்றைய மோட்டார் சைக்கிளில் வந்த நபர் எந்தக் காயமுமின்றி தெய்வாதீ னமாகத் தப்பினார்.

## அழகெழல் போட்டி நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தேசிய கல்வியி யற் கல்லூரி நுண்கலை மன்றத்தின ரால் நடாத்தப்படும் அழகெழல் போட் டிகள் நேற்று ஆரம்பமாகின.

கல்லூரியின் பிரதான மண்டபத் தில் நுண்கலை மன்றத்தலைவர் மதனகோபன் தலைமையில் ஆரம்ப மாகிய இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக நுண்கலைத்துறைப் பீடாதி பதி சபா ஜெயராசாவும் சிறப்பு விருந் தினர்களாக செ.யோகநாதன், தன பாலன் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.



சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் தகவல் தொழில்நுட்ப நிலையத் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றபோது, வடக்கு - கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் இராசையா நாடாவை வெட்டி திறந்து வைப்பதையும் , அருகில் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் நிற்பதையும் காணலாம். (207)


உஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 23 - 11 - 1950
இறப்பு 26 - 03 - 2003

நடேஸ் தங்கவேலாயுதம்

அழுவற்ற அன்பா அரவணைத்த அப்பாவே! ஈராண்டு ஆனபோதும் ஆறவில்லையே எம் இதயம். ஒன்றாலும் ஈடுசெய்ய முடியவில்லையே உங்கள் இழப்பை. இன்னொரு ஜென்மம் என்று ஒன்று இருந்தால் நீங்களே எமக்கு அப்பாவாக வரவேண்டும்.

என்றும் உங்கள் ஆத்மா சாந்திக்காகவும் இறைவனிடம் வேண்டுகிறோம்.

பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை மனைவி, பிள்ளைகள்

(C/3934)

# ஜனாதிபதி நிதியத்திலிருந்த பல மில்லியன் ரூபா மாயம்!

## ஐ.தே.க பிரதிச் செயலாளர் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி நிதியம் - ஏவருடையதும் தனிப்பட்ட சொத்து அல்ல. அது இந்த நாட்டு மக்களுடையது. அதன் நிதி நடவடிக்கைகளை அறிந்துகொள்வது மக்களுடைய உரிமை என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நிதியம் தொடர்பாக வெளியாகியுள்ள கணக்காய்வு அறிக்கைகளில் பல மில்லியன் ரூபாவுக்கு என்ன நடந்தது என்பது தெளிவுபடுத்தப்படவில்லை.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் உரிய நிவாரணங்களை வழங்காமையை அடுத்து, அவர்கள் 100 மீற்றருக்கு உட்பட்ட தமது பழைய இடங்களுக்குச் சென்று குடியிருக்க முற்படுகின்றனர்.

இதன்போது அரசாங்கத்துக்கு ஆதரவாளர்களாக இருப்போருக்கு எந்தவித பிரச்சினைகளும் இல்லை எனினும், ஏனையோர் படையினரைக் கொண்டு விரட்டியடிக்கப்படுகின்றனர்.

எனவே இது தொடர்பாக மக்களுக்குப் பொறுப்புக் கூறப்படவேண்டும்.

சர்வஜன வாக்கெடுப்பு என்பது தனியொருவரின் விருப்பத்துக்கு ஏற்ப இடம்பெறும் செயற்பாடாகும்.

ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச சர்வஜன வாக்கெடுப்பை ஒரு ஏமாற்றுவித்தை என இரண்டு வருடத்துக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

எனினும், தற்சமயம் அரசாங்கத்தில் இணைந்திருக்கும் அந்தக் கட்சி சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பான உண்மை நிலைப்பாட்டை வெளியிடவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். (01)

### அரசின் வங்கிக் கணக்குக்கு

# நூற்றைம்பது கோடி ரூபாவை உலக வங்கி வழங்கியது!

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீளக்கட்டியெழுப்ப உலக வங்கி 150 கோடி ரூபாவை வழங்கியிருப்பதாகத் திறைசேரி செயலாளர் பி.பீ.ஜயசுந்தர தெரிவித்தார்.

இலங்கையை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்காக உலக வங்கி 150 கோடி ரூபாவை (15 மில்லியன் அமெரிக்க டொலர்) அரசின் கணக்குக்குக் கடந்த 22 ஆம் திகதி அனுப்பியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு உதவி வழங்குவதாக உறுதியளித்த ஏனைய வெளிநாட்டு அரசாங்கங்களும், தனியார் அமைப்புகளும் தாங்கள் உறுதியளித்த தொகையை இந்த மாத இறுதிக்குள் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட தமது வியாபாரங்களை மீண்டும் கட்டியெழுப்ப கடன் கேட்டு விண்ணப்பித்திருந்த வியாபாரிகளுக்கு அவர்களின் வியாபார நடவடிக்கைகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக அரச வங்கிகளான மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி என்பன சுசஹன கடன் திட்டத்தின் கீழ் இதுவரை 100 கோடி ரூபாவை வழங்கியுள்ளன.

அத்துடன், மேலும் 500 கோடி ரூபாவுக்கான கடன் கோரும் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டுவருவதாகவும் திறைசேரி செயலாளர் மேலும் தெரிவித்தார். (தே)

# திருமலையில் வெடிமருந்துடன் முஸ்லிம் இளைஞர் கைது!

(திருகோணமலை)

திருகோணமலை - இறக்ககண்டி வீதியில் 23 வயது முஸ்லிம் இளைஞரொருவர் ஜெலிக்னைட் குச்சிகளுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

உப்புவெளியைச் சேர்ந்த மீனவரான இந்த இளைஞர் - டயனமைட் வைத்து மீன்பிடிப்பதற்காக இதனை எடுத்து வந்த சமயம் இறக்ககண்டி பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட அப்துல் ஜவ்பர் மொகமட் ரமீஸ் என்ற இந்த இளைஞன், திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# தென்னாபிரிக்க ஹெலியை அரசாங்கம் விடுவித்தது

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் அரசசார்பற்ற நிறுவனமொன்று தென்னாபிரிக்காவிலிருந்து கொண்டுவந்தவேளை - சுங்க அதிகாரிகளால் விசாரணைக்கெனத் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஹெலிகொப்டர் விடுவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் தொடர்பான விசாரணைகளுக்காகக் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்தக்ஹெலிகொப்டர் - குற்றத்தடுப்பு பிரிவினரின் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவைத் தளமாகக் கொண்ட அரசசார்பற்ற நிறுவனம், இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்கும் ஜேர்மனின் பியூமெடிக்கா நிறுவனத்துக்கு இந்தக் ஹெலியை கொண்டுவந்தது.

இந்தக் ஹெலி - தமது தேவைக்கே கொண்டுவரப்படுவதாகவும், இதனைக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்குவதற்கான அனுமதியை வழங்க வேண்டுமென பியூமெடிக்கா நிறுவனம் விமானப்படைத் தளபதிக் குக் கடந்த ஜனவரி 12 ஆம் திகதி கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

எனினும், இந்தச் ஹெலி விமான நிலையத்துக்குக் கொண்டுவரப் பட்டபோது, அது பாதுகாப்பு அனுமதியைப் பெறவேண்டுமெனக் கூறி சுங்க அதிகாரிகள் தடுத்து வைத் னர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்ட இந்தக் ஹெலி மீதான விசாரணை முடிவடைந்ததாகப் பாதுகாப்பு அமைச்சு கடந்த 9 ஆம் திகதி அறிவித்ததையடுத்து, இந்தக் ஹெலி விடுவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கு பொதுக்கட்டமைப்பில் புலிகளுக்கு இடம்கிடையாது

## ஹெல உறுமய கூறுகிறது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சுனாமியின் பின்னர் புனரமைப்புப் பணிகளுக்காகப் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதை ஜாதிக ஹெல உறுமய ஏற்றுக்கொண்டுள்ளது.

எனினும், கிழக்கு மாகாணத்தின் அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இந்தக் கட்டமைப்புக்குள், தமிழீழ விடுதலைப் புலிகளை இணைப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

இதனை மீறி அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து, பொதுக்கட்டமைப்பை நிறுவினால், உயிரையும் கொடுத்துப் போராடத் தயார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்டார் பௌத்தபிக்கு

(திருகோணமலை)

திருகோணமலையில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஹந்தனகமுகே நந்தசேனதேரர் தனது உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டுவந்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் திருகோணமலை அரசாங்கஅதிபர் வழங்கிய வாக்குறுதியை அடுத்தே இந்தப்போராட்டம் கைவிடப்பட்டது.

அங்கு திரண்டிருந்த மக்கள், அரசாங்க அதிபரிடம் எழுத்துமூலமான வாக்குறுதியைப் பெற்றுக்கொள்ளுமாறு விடுத்த வேண்டுகோளுக்கமைய தேரர் சம்பவ இடத்தில் இருந்து எழுந்திருக்க மறுத்துவிட்டார்.

இதேவேளை - சம்பவ இடத்துக்கு நேரில் வருகைதந்த அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மற்றும் மேல்மாகாண சபையின் முதலமைச்சர் றெஜினோல்ட் கூரே ஆகியோர் உறுதிமொழியை வழங்கியதை அடுத்து தேரர் தனது போராட்டத்தை முழுமையாக முடிவுக்குக் கொண்டுவந்தார்.

# புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்கி பொதுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும்!

## திருமலை மக்கள் பேரவை அறிக்கை

(திருகோணமலை)

சமாதானம் நீடித்து நிலைப்பதை அரசாங்கம் உண்மையாகவே விரும்பின், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாக அமைப்பை வழங்கி, பொதுக்கட்டமைப்பை உடனடியாக உருவாக்க வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தி திரு கோமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு, மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டன. எனினும் அரசாங்கம் எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

சமாதானப் பேச்சுவார்த்தையை இடைநிறுத்தி, ஒன்றரை ஆண்டுகள் கடந்துவிட்டன.

இருபது வருடகாலப் போராட்டத்தில் எத்தனையோ இழப்புக்களைச் சந்தித்த தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு, சமாதான காலத்திலும்கூட அறுபதுக்கும் மேற்பட்ட போராளிகளை இழந்துள்ளது.

இந்த நிலையில் இடைக்கால நிர்வாக யோசனையானது - அரசாங்கத்தின் பரிசீலனையிலிருந்து முற்றாகவே விலக்கப்பட்டுவிட்டதாகவே தாம் கருதுவதாக மக்கள் பேரவையின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பொதுக் கட்டமைப்பின் அவசியத்தன்மை கருதி, தமிழீழ விடுதலைப்புலிகள் பல விட்டுக்கொடுப்புகளுக்கும் உடன்பட்டு, பொதுக்கட்டமைப்பு மீதான தமது பற்றுதலை வெளிப்படுத்தியுள்ளனர். இந்தநிலையில் ஜே.வி.பி, ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போன்ற சிங்கள பேரினவாத சக்திகளின் அச்சுறுத்தலுக்கு அடிபணிந்து, ஜனாதிபதி பொதுக் கட்டமைப்புப் பற்றித் தமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்த தயங்குகிறார்.

இதேவேளை - தொடர்ந்து அமைதி நிலைப்பதை ஜனாதிபதியும், அரசாங்கமும் விரும்பினால் உதட்டளவில் பேசுவதை நிறுத்திவிட்டு, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வெளியிட்ட அறிக்கையில் கேட்டுள்ளார். (01),(04)

# சீனப்பிரதமர் அடுத்த மாதம் இலங்கைக்கு வருகிறார்!

(கொழும்பு)

தென்னாசிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ள சீனப் பிரதமர் வென்ஜியாபோ அடுத்த மாதம் இலங்கைக்கு வருகைதரவுள்ளார்.

அடுத்தமாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம்திகதிவரை இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளுக்கான விஜயத்தை மேற் கொள்ளும் சீனப்பிரதமர் - இறுதியாக இலங்கைக்கும் வருகைதரவுள்ளதாகச் சீன வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் லியூஜியான் சியோ தெரிவித்தார்.

தென்னாசிய நாடுகளுடன் சீனா நீண்டகாலமாக நட்பு மற்றும் நெருங்கிய உறவுகளைக் கொண்டுள்ளது. நாம் அனைவரும் அபிவிருத்தி அடைந்துவருபவர்கள். உலகத்தை சமாதானவழியில் பாதுகாக்கவும், அபிவிருத்தியை முன்னெடுக்கவும், விளைவுகளை எதிர்பாராமல் பங்கெடுக்க வேண்டும்.

சீனப் பிரதமரின் இந்த விஜயம் சீனாவுக்கும், நான்கு ஆசியநாடுகளுக்குமிடையே நெருங்கிய உறவை ஏற்படுத்த வழிவகுக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

# எழுதுநர் மற்றும் இணைந்த சேவையில் மேலும் 400 பேருக்கு நியமனம்

(கொழும்பு)

எழுதுவினைஞர்கள் மற்றும் இணைந்தசேவைகளில் சித்தியடைந்த 400 பேருக்கு நியமனக் கடிதம் வழங்கப்படவுள்ளன.

நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு - எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

எழுதுவினைஞர் இணைந்த சேவைகளில் 2002 ஆம் ஆண்டில் நடைபெற்ற பரீட்சையில் சித்தியடைந்த 1628 பேர் முதலாவது தொகுதியாகக் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் அரசின் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

அந்தப் பரீட்சையில் இரண்டாவது தொகுதியாகத் தெரிவு செய்யப்பட்டே 400 பேருக்கு இந்த நியமனக் கடிதங்கள் வழங்கும் வைபவம் - கொழும்பு புதிய நகர மண்டபத்தில் அமைச்சர் அமரசிறி தொடக்கெட தலைமையில் இடம்பெறவுள்ளது. (தே)

# மின்சாரசபை ஊழியர் போராட்டத்துக்கு ஜே.வி.பி. ஆதரவு வழங்கவுள்ளது

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்தை அமைத்தது நாட்டை விற்பதற்கல்ல, நாட்டைப் பாதுகாக்கவேயாகும்.

எனவே மின்சார சபை ஊழியர்களின் போராட்டத்துக்கு ஜே.வி.பி தனது முழுமையான ஆதரவை வழங்குமென அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பியசிறி விஜய நாயக்க தெரிவித்தார்.

மின்சார சபை - தனியார் மயப்படுத்தப்படுவதை எதிர்த்து, கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற மின்சார சபை ஊழியர் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

மோசமான செயல்களைச் செய்து எம்முடன் விளையாடலாமென அமைச்சரவையினுள் நினைத்துக் கொண்டிருக்க வேண்டாம். ஜே.வி.பியின் தொழிற் சங்கம் என்ற வகையிலும் சக்திமிக்கது.

அரசாங் கத்தினுள்ளும் எமது அதிகாரம் சக்திமிக்கது. தேவையற்றவர்களை இங்கிருந்து துரத்திவிடவும் நாம் தயாராகவே உள்ளோம்.

நாட்டை விற்று, மற்றவர்களின் நிறைவில் வாழும் மனிதர்களைப் போலானவர்களல்ல உழைக்கும் மக்கள். தற்போது இவர்களை நாடாக மாற்றுவதற்கு எவருமில்லை. தற்போது உழைக்கும் மக்களை, தமது தேவைக்கு எவருமே ஆட்டிப் படைக்க முடியாது.

எனவே அரசாங்கத்தில் அசிங்கமான செயல்களைச் செய்யும் எவராக இருந்தாலும், அவர்களுக்கு நாம் கூறுவது - சுற்று அமைத்த பொது ஜன ஐக்கிய முன்னணி போலல்ல, தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் எனத் தெரிவித்தார்.

# இந்திய அணிக்கு எதிரான டெஸ்டில் பாகிஸ்தான் 570 ஓட்டங்கள் குவிப்பு!



இந்திய அணிக்கு எதிரான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் இரண்டாம்நாளான் நேற்று பாகிஸ்தான் அணி நிலைத்து நின்று ஆடி 570 ஓட்டங்களைக் குவித்தது.

பெங்களூரில் நடைபெற்றுவரும் போட்டியில், முதலில் விளையாடிய பாகிஸ்தான் முதல்நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 323 ஓட்டங்களை எடுத்திருந்தது. கப்டன் இன்சமாம் 184 ஓட்டங்களுடனும், யுனுஸ்கான் 127 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று 2ஆவது நாள் ஆட்டம் தொங்கியபோது இருவரும் தொடர்ந்து ஆடினார்கள். பதான் வீசிய முதல் ஓவரில் யுனுஸ்கான் 2 பவுண்டரிகள் அடித்தார்.

அடுத்த ஓவரை தமிழக வீரர் எல்.பாலாஜி வீசினார். இதன் முதல் பந்தில் இன்சமாம் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அவர் மேலும் ஓட்டமெதையும் எடுக்காமல் 184 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இவர் 264 பந்துகளில் 25 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களைப் பெற்றிருந்தார். அப்போது பாகிஸ்தான் அணியின் ஸ்கோர் 331ஆக இருந்தது.

4ஆவது விக்கெட்டுக்கு யுனுஸ் கானுடன், யுகானா ஜோடி சேர்ந்தார். இருவரும் இந்திய அணியின் பந்து வீச்சை நம்பிக்கையுடன் எதிர்கொண்டு ஓட்டங்களை எடுத்தனர். முதல்நாள் சிறப்பாக விளையாடிச் சதமடித்த யுனுஸ்கான், நேற்றும் சிறப்பாக விளையாடினார். இதனால் பாகிஸ்தான் அணியின் ஸ்கோர் வேகமாக உயர்ந்தது.

96.5 ஓவரில் பாகிஸ்தான் அணி 350 ஓட்டங்களைத் தொட்டது. அதனைத் தொடர்ந்து சிறப்பாக விளையாடிய யுனுஸ்கான் 300 பந்துகளில் 150 ஓட்டங்களைக் கடந்தார். அவரது ஸ்கோரில் 16 பவுண்டரிகளும், ஒரு சிக்ஸரும் அடங்கும். பாகிஸ்தான் அணி 107.1 ஓவரில் 400 ஓட்டங்களைக் கடந்தது.

பாகிஸ்தான் 415 ஓட்டங்கள் இருக்கும்போது, மறுமுனையில் விளையாடிய யுகானா மதிய உணவு இடைவேளைக்கு சில ஓவர்கள் இருக்கும்போது, 37 ஓட்டங்களில் ஹர்பஜனின் பந்தில் விக்கெட் காப்பாளர் கார்த்திக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவர் 57 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களைக் கடந்தார்.

அடுத்து 5ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக யுனுஸ்கானுடன் அசீம் கமல் ஜோடி சேர்ந்தார். 2ஆவது நாள் மதிய உணவு இடைவேளையின்போது, பாகிஸ்தான் 116 ஓவரில் 417 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மதிய உணவு இடைவேளைக்குப் பின்பு பாகிஸ்தானின் விக்கெட்டுக்கள் மளமளவென சரிந்தன. ஒரு முனையில் விக்கெட் வீழ்ந்தாலும் மறுமுனையில் யுனுஸ்கான் சிறப்




பாக விளையாடி இரட்டைச்சதமடித்தார்.

மறுமுனையில் ஹர்பஜன்சிங் விக்கெட்டைஎடுக்க ஆரம்பித்தார். அவரது பந்தில் யுகானா (37), அசீம் கமல் (4), ரசாக் (5), கம்ரன் அக்மல் (28), யுனுஸ்கான் (267), கனேரியா (0) ஆகியோர் ஆட்டமிழந்தனர். யுனுஸ்கான் 504 பந்துகளில் 32 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 267 ஓட்டங்களை எடுத்தார்.

ஹர்பஜன்சிங் சிறப்பாகப் பந்து வீசி 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பாலாஜி -2, பதான் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். இதனால் பாகிஸ்தான் 570 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பின்னர் 2ஆவது நாள் முடிவடையும்நிலையில், 10 ஓவர்கள் இருக்கையில் இந்தியா முதல் இனிங்ஸைத் தொடங்கியது. தொடக்க ஆட்டக்




காரர்களாக கம்பீரும், ஷேவாக்கும் களமிறங்கினார்கள். 10 ஓவர்கள் முடிந்தநிலையில், இந்தியா விக்கெட் இழப்பின்றி 55 ஓட்டங்கள் எடுத்தது. ஷேவாக் 33 பந்துகளில் 5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 39 ஓட்டங்களுடனும், கம்பீர் 2 பவுண்டரிகளுடன் 13 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

## உதைபந்தாட்டப் போட்டி

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமி தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத் துறை யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றனது.

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வலிகாமம் றெட்ரேஞ்சஸ் விளையாட்டுக்கழகம் எதிர் அச்செழு வளர்மதி விளையாட்டுக்கழகமும், மாலை 4.30 மணிக்கு நடைபெறும் மற்றைய ஆட்டத்தில் வலிகாமம் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழகம் எதிர் புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா கழகமும் மோதவுள்ளன.

# இலங்கை கிரிக்கெட் அணி நியூஸிலாந்துக்கு சென்றது!



டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இலங்கை கிரிக்கெட் அணி நியூஸிலாந்துக்குப் புறப்பட்டுச் சென்றது.

இலங்கை கிரிக்கெட் அணி கடந்த ஆண்டு டிசம்பரில் நியூஸிலாந்துக்கு சுற்றுப்பயணம் சென்றது. அந்த நேரத்தில் சுனாமி பேரழிவால் இலங்கை மிகக்கடுமையாகப் பாதிக்கப்பட, பயணத்தை ரத்துச் செய்து நாடு திரும்பியது. அப்போது விட்ட தொடரை முடிக்க, நேற்றுமுன்தினம் மீண்டும் நியூஸிலாந்து சென்றது இலங்கை அணி.

இந்தமுறை இரண்டு டெஸ்ட் போட்டிகளில் இலங்கை அணி பங்கேற்கும். பௌத்த பிக்குகள் வீரர்களுக்கு ஆசிவழங்கி வழியனுப்பி வைத்தனர். முதல் டெஸ்ட் அடுத்த மாதம் 4ஆம் திகதி நேப்பியரிலும், இரண்டாவது டெஸ்ட் 11ஆம் திகதி வெலிங்டனிலும் தொடங்குகின்றன. இந்தத் தொடரில் முரளிதரன் இல்லாதது இலங்கை அணிக்குப் பின்னடைவாகும்.

அணி விபரம் வருமாறு -

மாவன் அத்தப்பத்து (கப்டன்), ஜெயவர்த்தன, ஜெயசூர்ய, சங்கஹார, திலகரத்ன டில்சான், சமரவீர, சாந்த கலவித்கொட, உபுல் சந்தன, சமிந்த வாஸ், ஹேரத், பர்வேஸ் மஹ்ரூப், குலசேகர, மலிங்க மற்றும் ருச்சிர பெரேரா.

# 100ஆவது டெஸ்ட் போட்டியில் இன்சமாம் சதமடித்து சாதனை!



தனது 100ஆவது டெஸ்ட் போட்டியில் சதமடித்த 5ஆவது வீரராகத் திகழ்கிறார் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கப்டன் இன்சமாம்-உல்-ஹக்.

பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் வியாழக்கிழமை தொடங்கிய இந்தியாவுக்கு எதிரான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியின் முதல் நாளில் இந்தச் சாதனையைப புரிந்தார் இன்சமாம்.

பாகிஸ்தான் சார்பில் 100 டெஸ்ட் போட்டி களில் விளையாடும் 4ஆவது வீரராகத் திகழும் இன்சமாம், தனது 21ஆவது சதத்தை எட்டினார்.

இதற்கு முன்பு 100ஆவது டெஸ்ட் போட்டிகளில் சதமடித்தவர்கள்-

கொலின் கோட்ரி (இங்கிலாந்து) 1968இல் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக 104 ஓட்டங்கள், ஜாவிட் மியான்டட் (பாகிஸ்தான்) 1989-90இல் இந்தியாவுக்கு எதிராக 145 ஓட்டங்கள், கோர்டன் கிரீனிட்ச் (மேற்கிந்தியத் தீவுகள்) 1990இல் இங்கிலாந்துக்கு எதிராக 149 ஓட்டங்கள், அலெக் ஸ்ரூவர்ட் (இங்கிலாந்து) 2000இல் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக 105 ஓட்டங்கள்.

# இலங்கை அணியைச் சுருட்டி இங்கிலாந்து அபார வெற்றி!

WOMEN'S CRICKET WORLD CUP 2005 SOUTH AFRICA



(கேப்டவுண்)

தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் பெண்கள் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில்- இங்கிலாந்து அணி 214 ஓட்டங்களால் இலங்கை அணியைத் தோற்கடித்த அதேவேளை, தென்னாபிரிக்க, இந்திய, அவுஸ்ரேலிய அணிகளும் முதல் சுற்று ஆட்டத்தில் வெற்றிபெற்றன.

நேற்றுமுன்தினம் ஹேர்ல் குயின்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இங்கிலாந்து-இலங்கை அணிகளுக்கிடையிலான போட்டியில் இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.


50 ஓவர்கள் முடிவில் இங்கிலாந்து 4 விக்கெட் இழப்புக்கு 284 ஓட்டங்களை எடுத்தது. எட்வேட்ஸ் 100 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் 63 ஓட்டங்களையும், நியூட்டன் 3 ஓட்டங்களையும், றெய்லர் 128 பந்துகளில் 11 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 136 ஓட்டங்களையும், கோனர் 47 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 54 ஓட்டங்களையும் எடுத்தனர்.

கிறீன்வே 9 ஓட்டங்களுடனும், பிரின்டிங் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



உடவத்த 3 விக்கெட்டுக்களையும், அல்வில் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 26 ஓவர்களுக்குள் 70 ஓட்டங்களை மட்டும் எடுத்து ஆட்ட



மிழந்தது. இலங்கை அணியில் எவருமே இரட்டை இலக்க ஓட்டங்களை எடுக்கவில்லை. உடவத்த மட்டும் 8 ஓட்டங்களை அதிகபட்சமாக எடுத்தார்.

பந்துவீச்சில் பியர்சன்-3, கற்-3, பேர்ச்-2, குகா-1 விக்கெட்டை வீழ்த்தினர்.

இதன்மூலம் 214 ஓட்டங்களால் இலங்கை அணி தோல்விகண்டது.

இதேவேளை மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான இன்னொரு ஆட்டத்தில் ஒரு ஓட்டத்தால் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றது.

அதேவேளை அயர்லாந்துடனான ஆட்டத்தில் இந்தியா 9 விக்கெட்டுக்களாலும், நியூஸிலாந்துடனான ஆட்டத்தில் 32 ஓட்டங்களால் அவுஸ்ரேலிய அணியும் வெற்றி பெற்றன.

# வலயமட்ட இறுதிப் போட்டியில் யாழ்-கொக்குவில் இந்து அணிகள்!

யாழ்.கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதியாட்டங்களில், இடைக்காடு மகாவித்தியாலயத்தை வெற்றிகொண்ட யாழ். இந்துக் கல்லூரியும், கனகரத்தினம் மகாவித்தியாலயத்தை வெற்றி கொண்ட கொக்குவில் இந்துக் கல்லூரியும் இறுதியாட்டத்தில் மோதவுள்ளன.

யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடந்த முதலாவது அரையிறுதியாட்டத்தில், முதலில் துடுப்பெடுத்தாடிய இடைக்காடு மகாவித்தியாலயம் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 57 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் கார்த்தீபன் 15, தனுசன் 10 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணியின் மயூரப்பிரியன் 13 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், அஜிர் 2 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், றெசிகலி 5 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

15 ஓவர்களைக்கொண்ட இந்தச் சுற்றுப்போட்டியில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி 9.3 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 58 ஓட்டங்களைப் பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதில் றெசிகலி 20, கஜேந்திரன் 16 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் மயூரன் 17 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும், யாழ்.கனகரத்தினம் மகாவித்தியாலயத்திற்கும் இடையில், யாழ்.கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.கனகரத்

விளையாட்டு

தினம் மத்திய மகாவித்தியாலய அணி 14.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சாம்சன் 17, கிருஷ்ணா 6, வசீகரன் 5 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

கொக்குவில் இந்து அணியின் சார்பில் துவிசாந் 6 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், மயூரன் 7 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், அருண் 4 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 11.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 56 ஓட்டங்களைப் பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது.

இதில் அஜந்தன் 24, ரஜிந்தன் 12, நிருபன் ஆட்டமிழக்காமல் 6 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி அடுத்தவாரம் இடம்பெறவுள்ளது. இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்ற இரு அணிகளும் மாவட்ட மட்டப்போட்டியில் கலந்துகொள்ளும் தகுதியினையும் பெற்றுள்ளன. (58)

# எல்லே போட்டியில் வீனஸ் சம்பியன்!

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான எல்லே போட்டியில் புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகம் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

கடந்தவாரம் புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ற் விளையாட்டுக் கழகம் விளையாடியது. எவரெஸ்ற் விளையாட்டுக்கழகத்தை 6:4 என்ற ஓட்டங்கள் அடிப்படையில் வீனஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.


வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகம், விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகத்தை 8:4 என்ற ஓட்டங்கள் அடிப்படையிலும், எவரெஸ்ற் விளையாட்டுக்கழகம் வாதரவத்தை விக்னேஸ்வரா அணியை 4:2 என்ற ஓட்டங்கள் அடிப்படையிலும் வெற்றிகொண்டதன் மூலம் இறுதிப் போட்டியில் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆட்டங்கள் யாவும் கோப்பாய் பிரதேச விளையாட்டு அதிகாரி எஸ்.சுதாகரன் தலைமையில் இடம் பெற்றது.



டெஸ்ட் போட்டிகளில் 100 ஆவது போட்டியை விளையாடும் பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாமுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டபோது....

# புதிர்




(முற்றும்)



சிறுவர் அரங்கம்

# எனது பொம்மை

தோழா! எனக்கொரு பாப்பா உண்டு
தொட்டில் தானதன் வீடாகும்
வீழாமல் அதனை அணைத்திடுவேன் - நான்
விளையாட்டெல்லாம் காட்டிடுவேன்.

கையைக் கையை ஆட்டுமடா - அது
காலை மடக்கி நீட்டுமடா
பைய மெல்ல அடியெடுத்து - அது
பாரினில் நடந்து உலவுமடா.

புத்தகந் தன்னைக் கிழிக்குமடா - அது
பொருட்களை வாங்கி எறியுமடா
எத்தனை குற்றஞ் செய்தாலும்
எவர்க்கு மதனில் பட்சமடா.

என்னைக் கண்டால் சிரிக்குமடா - அது
இன்பக் கதைகள் உரைக்குமடா
சின்னக் கையால் அடிக்குமடா - அது
சேர்த்துப் பின்னர் அணைக்குமடா.

இந்தக் கவிதையை எழுதியவர் கவிஞர் யாழ்ப்பாணன். குழந்தை ஒன்று தனக்குக் கிடைத்த பொம்மை ஒன்றை வைத்துக் கொண்டு பாடுவதாகக் கவிஞர் பாடுகிறார். சின்னக் குழந்தைகளின் செயல்களை வெகு அழகாக கவிஞர் பாடியுள்ளார். நீங்களும் இவ்வாறான கவிதைகளை எழுதி அனுப்புங்கள்.

# தூருவர்

கோபத்தை எப்படி என்னால் அடக்க முடிந்தது என்று கேட்டால், அது ஒரு பயனற்ற கேள்வி. ஒரு பழக்கமாக வைத்துக்கொண்டு அடிக்கடி பயிற்சி செய்வதன் மூலம் அதிலே சித்திபெற வேண்டும்.

- காந்தியடிகள்

டி.பி.லதா, எம்.ஜி.எச்.பாடசாலை, பருத்தித்துறை

நிதர்சன்
கோண்டாவில் மேற்கு
கோண்டாவில்

பிரதம ஆசிரியர்
சிறுவர்அரங்கம்
நமதுஈழநாடு

ஐயா

கலட்டி ஒழுங்கை கோட்டாவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட சி.நிதர்சன் சி.சிந்துஜா ஆகிய நாம் யாழ். கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் கல்விகற்றுக் கொண்டு இருக் கிறோம். நமது ஈழநாடு பத்திரிகையை தினமும் காலையில் வாசித்து விடுவோம். அந்தப் பத்திரிகை மீதும், பத்திரிகை ஆசிரியர்மீதும் எமக்கு மிகுந்த அபிமானம் உண்டு. நாங்கள் இருவரும் சிறுவர் அரங்கத்தை விரும்பி வாசிப்போம் அந்தப் பகுதிக்கு எங்களது ஆக்கங்களை அனுப்பிவைக்கின்றோம். பிரசுரித்து உதவுவீர் களாயின் நன்றியுடையவர்களாக இருப்போம்

நன்றியுடன்
இங்கணம்
சி.நிதர்சன்.



அன்புக்குரிய சிறுவர்களே!
நீங்கள் அனுப்பும் ஆக்கங்கள், கைவண்ணங்கள் சிறுவர் அரங்கம் பகுதியில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே வந்த ஆக்கங்களைத் தவிர்த்து புதிய ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள்.அதற்கு நீங்கள் நிறைய வாசிக்க வேண்டும்.மேலும் உங்கள் கடிதம் மூலம் உங்களுடைய விருப்பங்கள் ஆலோசனைகளைத் தெரிவியுங்கள் அவை கவனத்தில் எடுக்கப்படும்.

பாசமுடன்
சாரு அக்கா.




## ஓவியப்போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றவர்களின் பெயர்களும் , ஓவியங்களும்.

செ.மாதூரன்
தரம் - 10
கொக்குவில் இந்துக் கல்லூரி.



ம.மயூரி
தரம் - 10
பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி



அ.கிறிஸ்ரிடினேஸ்
தரம் - 11
யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்




## உங்கள் கைவண்ணம்

நா.மேனகா
தரம் - 9
மல்லாகம் மகா
வித்தியாலயம்






# அரசனைத் தெரியுமா?

பிரான்ஸ் நாட்டை நெப்போலியன் போனபார்ட் என்ற மாவீரன் ஆண்டு வந்தான். அவன் தாய்நாட்டுப் பற்று மிக்கவன். அவனது போர்த்திறமை அளவிடற்கரியது. நெப்போலியன் பல போர்களில் வெற்றி வாகை சூடியவன்.

ஆனால் நெப்போலியன் - சிறு வயதில் மிகவும் வறுமையில் வாடியவன். அவன் பாடசாலையில் கல்வி கற்கும்போது அவனு டைய தாய், தந்தையர் ஒரு குறிப்பிட்ட அளவு பணமே அவனது செலவிற்காகக் கொடுப்பார்கள். அந்தப் பணத்தை அவன் மிகவும் சிக்கனமாக ஒரு மாத காலம் வரை யில் வைத்திருந்து செலவு செய்வான். அந்த வயதிலேயே அவன் எப்போதும் உண்மையே பேசுவான்.



தன்னுடன் படிக்கும் மாண வர் எவராவது பொய் பேசினால், அவன் கண்டிப் பான். நல்ல பழக்க வழக்கங்களும், நற்குணங்களும் ஒருங்கே அமை யப் பெற்றவன் நெப்போலியன்.

பாடசாலைப் படிப்பு முடிந்ததும் பெற்றோர் அவனை ஒரு இராணுவப் பள்ளியில் சேர்த்தனர். அங்கு படிக்கும்போது அவன் அடிக்கடி அருகில் உள்ள பழக்கடைக்குச் சென்று பழங்கள் வாங்கித் தின்பான். அந்தப் பழக்கடையை ஒரு வயதான கிழவி நடத்தி வந்தாள்.

அந்தக் கிழவியும் நெப்போலியனின் உருவத்தையும், வாய் மொழி வன்மையையும், நல்ல ஒழுக்கத்தையும் கண்டு அவனி டத்தில் அன்பு செலுத்தி வந்தாள். அவனும் அந்தக் கிழவியிடம் அன்பும் மரியாதையும் செலுத்தி வந்தான்.

ஒருமுறை நெப்போலியனுக்கு தந்தை போதுமானளவு பணம் கொடுக்கவில்லை. அதனால் இரண்டு நாட்கள் பழக்கடைக்குப் போகவில்லை. மூன்றாம் நாள் கடைக்குச் சென்றான். கிழவி அவனைக் கண்டதும், மகிழ்ச்சிகொண்டு இரண்டு நாட்களாக அவன் வராத காரணத்தைக் கேட்டாள்.

நெப்போலியன் உண்மையைச் சொல்லிப் பணம் இல்லாமல் பழம் வாங்குவது எப்படி என்று வராமல் இந்துவிட்டதாகக் கூறினான். கிழவி அவன் நிலையை உணர்ந்து வேண்டிய நல்ல பழங்களாக எடுத்துக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னாள்.

ஆனால் நெப்போலியன் மறுத்தான். நான் பணம் கொடுக் காமல் பழம் எடுக்கமாட்டேன். எனக்குப் பணம் கிடைத்ததும் பழம் வாங்கிக் கொள்கிறேன்! என்றான். ஆனால் கிழவி விடவில்லை.

நெப்போலியனும் அப்படியானால் பணம் வந்ததும் பழத்துக்கான பணத்தைப் பெற்றுக்கொள்வதாய் இருந்தால் வாங்கிக் கொள்கிறேன் எனக் கூறினான். கிழவியும் ஒப்புக்கொண்டு அவனுக்குப் பழங்களைக் கொடுத்தாள்.

அன்று பழங்களை வாங்கி உண்டுவிட்டுச் சென்ற நெப்போலி யன் மீண்டும் பழக்கடைக்குச் செல்லவில்லை. அந்தநேரம் பிரான்ஸ் நாட்டில் போர் தொடங்கியது. நெப்போலியன் பிரான்ஸ் நாட்டின் தரைப்படையில் போர்வீரனாகச் சேர்ந்தான்.

தன் போர்த் திறமையாலும், அறிவு நுட்பத்தாலும் அவன் மிக விரைவில் பிரான்ஸ் நாட்டுக்கு மன்னன் ஆகிவிட்டான்.

ஒருநாள் தன் நாட்டு மக்கள் எவ்வாறு வாழ்கின்றனர் என்பதைக் காண மாறுவேடத்துடன் நகர்வலம் வந்தான். அந்தநேரம் எதிர்பாராதவிதமாகக் கிழவி பழக்கடை வைத்திருந்த வீதிவழியாக வந்தான்.

அந்தக் கிழவியே பழக்கடையில் அமர்ந்திருந்தாள். உடனே நெப்போலியன் அந்தக் கடைக்குள் நுழைந்தான். அவனைத் தொடர்ந்து அவனது சேனாதிபதிகளும் உள்நுழைந்தனர். நெப்போலியன் அந்தக் கிழவியைப் பார்த்து - அம்மா சுகமா? என்றான். கிழவிக்கு வயதாகி விட்டதால் கண் தெரியவில்லை. அதனால் அவனை அடை யாளம் கண்டுகொள்ள முடியவில்லை.



அவளும் சுகமே என்று கூறினாள். ‘அம்மா! இந்த நாட்டு அரசனை உனக்குத் தெரியுமா? அவன் ஆட்சியில் நீ சந்தோஷமாய் இருக்கி றாயா? என்று கேட்டான் நெப்போலியன்.

தெரியுமாவா? அவன் சிறு வயதாய் இருக்கும்போது அடிக்கடி என் கடைக்கு வருவானே. நல்ல சிறுவன் அல்லவா அவன் என்று மகிழ்ச்சியோடும் ஒருவித உரிமையோடும் கூறினாள். அதைக்கேட்ட நெப்போலியன் மகிழ்ந்து உங்க ளுக்கு அவன் ஏதாவது கடன் தரவேண்டுமா? என்று கேட்டான். கிழவி இல்லை என்றாள்.

இல்லை உங்களுக்கு மறந்துவிட்டது. அவன் உங்க ளுக்குக் கடன்கொடுக்க வேண்டும். இதைப் பெற்றுக்கொள் ளுங்கள் என்று அவள் கையில் பணத்தைக் கொடுத்தான்.

அவனுடைய கைகள் இரண்டையும் பற்றிக்கொண்டு கிழவி நெப்போலியனா! நீயா என்னைத் தேடி வந்து விட்டாயா? நீ வாழ்க இந்த ஏழையின் மீது இவ்வளவு பற்று வைத்திருப்பாய் என்று நான் நினைக்கவில்லையே! நெப் போலியனே நீ வாழ்க! என்று கூறி வாழ்த்துக் கூறினாள் அந்தக் கிழவி.

நெப்போலியனைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டதும் அவனுடன் வந்த வீரர்கள் கிழவியை நெருங்கினர். ஆனால் நெப்போலியன் அவர்களை கை சாடை காட்டித் தடுத்து நிறுத்தினான். அவள் என் தாய்க்குச் சமம் என்று கூறி அவளிடத்தில் விடைபெற்றுச் சென்றான்.

அரண்மனைக்குச் சென்றதும், கிழவிக்கு ஒரு நல்ல வீடும் பொருளும் கொடுக்க உத்தரவிட்டான். இதைக் கேட்ட கிழவி மனமகிழ்ந்தாள்.

# மூளைக்கு வேலை

1. ஒரு நகரத்திலுள்ள 2 நூல் நிலையங்களில் 7, 67, 895 நூல்களும் - மற்றொன்றில் அதைவிட 80, 954 நூல்கள் குறைவாகவும் இருந்தன எனில், இரண்டு நூல் நிலையங்களிலும் மொத்தமுள்ள நூல்கள் எத்தனை?

2.
- 37 வாரங்களில் எத்தனை நாட்கள் உண்டு?
- 96 மணித்தியாலங்களில் எத்தனை நாட்கள் உண்டு?

# மூளைக்கு வேலை


## சென்றவார விடைகள்

1. ஆறு வரிசைகள்


| | |
|---|---|
| 458 | 584 |
| 845 | 854 |
| 548 | 458 |

2. 30 வினாடிகள்

## எந்த எண்ணின் ஊடாகச் சென்றால் இசையைக் கேட்கமுடியும்




இங்கு 9 சதுரங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்துள்ளன. இந்தச் சதுரங்களைக் கையை எடுக்காமல், குறுக்கே செல்லாமல் ஒரே கோட்டில் வரைய வேண்டும். முயற்சி செய்து பாருங்கள்.



# விடுகதைகளும் விடைகளும்

1. அவள் ஒரு பாடகி, ஆனால் பெண் அல்ல.
 - அவள் யார்?
2. இதை வெட்டினால் நல்லது, வெட்டாவிட்டால் ஆபத்து. அதை வெட்டினால் ஆபத்து, வெட்டா விட்டால் நல்லது.
 - அவை என்ன?
3. ஐந்து அடுக்கு. நான்கு இடுக்கு.
 - அது என்ன?
4. தங்கை விளக்குக் காட்ட, அண்ணன் மேளம் கொட்ட, அம்மா தண்ணீர் தெளிக்கிறாள்.
 - அவை என்ன?

### விடைகள்

1. குயில் 2. நகம் - முடி 3. விரல்கள் 4. மின்னல் - இடி - மழை



# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்

முழுப் பெயர் :....................................
கற்கும் பாடசாலை :....................................
கற்கும் தரம் :....................................
வீட்டு முகவரி :....................................
பிறந்த திகதி :....................................
ஆர்வமுள்ள துறைகள் :....................................
:....................................

.................... ....................
திகதி ஒப்பம்

.................... ....................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்



படத்தைப் பாருங்கள் நாய், குருவி, பூனை, மீன் நான்கு பேரும் தங்களுடைய வீட்டைத் தேடுகிறார்கள். அவர்களுக்குரிய வீட்டைச் சென்றடைய வழி காட்டுங்கள்

# நரியார் சாப்பிட்ட உணவு

அடர்ந்த பெரிய காடு ஒன்று இருந்தது. அந்தக் காட்டில் இருந்த நரி ஒன்றுக்கு சரியான உணவு கிடைக்கவில்லை.

அன்று பௌர்ணமி இரவு பசியோடு தனது இரைக்குக் காத்திருந்தது நரி. நரியின் கண்களில் புதரிலிருந்து வெளியே வந்த முயல்பட்டு விட்டது. அவ்வளவு தான் ஒரே பாய்ச்ச லாகச் சென்று முயலுக்கு முன்னால் நின்றது நரி.

முயலோ பயத்தில் வெலவெலத்துப் போய்விட்டது. சரி யான பசியுடனும் ஆவேசத்துடனும் இருந்த நரி 'உன்னைத் தின்னப்போகிறேன்' என்றது.



முயலுக்கு சட்டென்று ஒரு யோசனை உதித்தது. நரியைப் பார்த்து 'நீங்கள் சரி யான பசியுடன் இருக்கிறீர்கள் என்னை மட்டும் சாப்பிட்டால் உங்கள் பசி அடங்காது என்னை விட அளவில் பெரிய ஒருவன் இருக்கிறான். அவனைச் சாப்பிட்டால் உங் கள் பசி அடங்கும் என்றது.

'நீ என்னை ஏமாற்றப் பாக்கிறாயா?' என்றது நரி சந்தேகத்துடன் –

இல்லை நான் சொல்வது உண்மை. என்னுடன் வந்தால் அவனைக் காட்டுகிறேன். என்றது முயல்.

உடனே நரி முயலுடன் புறப்பட்டது. முயல் – நரியை ஒரு கிணற்றிற்கு அழைத்துச் சென்றது. கிணற்றில் நீர் இறைப்பதற்காகக் கயிற்றின் இரு முனைகளிலும் இரண்டு வாளிகளைப் பிணைத்திருந்தனர்.



முயலும், நரியும் கிணற்றை எட்டிப் பார்த்தன. அதில் கிணற்றின் ஆழத்தில் பௌர்ணமி நிலவின் விம்பம் தெரிந்தது. அது பெரிய முயலைப்போலக் காட்சி தந்தது. பசியின் மயக்கத்தில் இருந்த நரி முயலின் கூற்றை அப்படியே நம்பியது.

'ஆமாம் தான் எப்படி அதை உண்ண முடியும்? அது ஆழத்தில் அல்லவா இருக்கிறது' என்றது நரி.

முதலில் இங்குள்ள ஒரு வாளியில் இறங்கி நான் கீழே செல்கிறேன். பின்னர் நீங்களும் மற்றொரு வாளியின் மூலம் கீழே வாருங்கள். இருவரும் சேர்ந்து அதைப் பிடிக்கலாம் என்றது முயல்.


'சரி! அப்படியே செய்யலாம்' நரி சொன்னது.

முயல் அருகில் உள்ள வாளியில் தாவிக் குவித்தது. அதை நிறை தாங்காமல் வாளி கீழே இறங்கத் தொடங்கியது. மற்றொரு வாளி மேலே வந்தது. உடனே முயல் நரியை நோக்கி சீக்கரம் வாளியில் குதித்து வாருங்கள் என்றது?

நரியும் மற்றொரு வாளியில் தாவி ஏறியது. நரி ஏறியதும் அந்த வாளி கீழே இறங்கியது.

முயலைவிட நரியின் நிறை அதிகமானதால் அந்த வாளி வேகமாகக் கீழே இறங்க மற்றொரு முனையில் இருந்த வாளி வேகமாக மேலே வந்தது. வாளி வெளியே வந்ததும் அதிலிருந்து வெளியே தாவிக் குதித்த முயல் – நரியாரே! ஆசை தீரச் சாப்பிட்டு விட்டு வாருங்கள் என்று கூறிவிட்டு ஓட்டம் பிடித்தது.

## எந்த வரிசையில் புத்தகங்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது... புழுவாருக்குச் சொல்லுங்கள்






# நாலெழுத்துப் புதிர்

இங்கு 'தி' என்ற எழுத்தைக் கொண்டு நாலெழுத்துப் புதிர் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு 'தி' யிலும் ஒரு வார்த்தை அடங்கியுள்ளது. கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புக்களைக் கொண்டு, இந்த 15 வார்த்தைகளையும் கண்டுபிடி யுங்கள்.



| | | | |
|---|---|---|---|
| | தீ | | |
| | | | தீ |
| | | | தீ |
| தீ | | | |
| | தீ | | |
| | தீ | | |
| | தீ | | |
| | | தீ | |
| | | தீ | |
| | தீ | | |
| | தீ | | |
| தீ | | | |
| தீ | | | |
| | | தீ | |
| தீ | | | |

1. மீண்டும் கேட்டல்.
2. வலை பின்னக்கூடிய எட்டுக் கால்களை உடைய சிறு பூச்சி.
3. ஒருவர் ஒன்றைச் செய்வதற்கு அளிக்கும் சம்மதம்.
4. மலைப்பு.
5. கால்கள் துடைக்க விரிக்கும் சிறு விரிப்பு.
6. விரல்களுக்கு அணியும் ஒரு ஆபரணம்.
7. வியந்து போதல்.
8. இரவு.
9. அஞ்சல் தலை.
10. வயதில் மூத்தோர்.
11. நண்பகல்.
12. எப்போதும் வடக்குத் திசையையே காட்டும் முள்ளை உடைய கருவி.
13. இருக்கும் அல்லது செல்லும் திசையில் இருந்து மாற்றுதல்.
14. முதலாவது தமிழ் மாதத்தின் பெயர்.
15. திட வடிவம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கண்உடையர் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டு*
*புண்உடையர் கல்லா தவர்.*

திருக்குறள்

## நமது நோக்கு

# கல்விச் சமூகத்தினரின் கவனத்திற்கு...!

கடந்த சில வருடங்களாக யாழ். குடாநாட்டின் கல்வித்தரம் மிகமோசமாக வீழ்ச்சி கண்டு வருவதாக எதிர்கால சமூகத்தினரின் மேம்பாட்டில் அக்கறை கொண்ட கல்விசார் சமூகத்தவர்கள் ஆழ்ந்த கவலை கொண்டவர்களாகியுள்ளதுடன், இது தொடர்பாக பல்வேறு மட்டத்தில் ஆய்வுகளை மேற்கொண்டும் வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆய்வுகளின் அடிப்படையில் எந்தவொரு ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. இதற்கு ஆளுக்காள் பல்வேறு காரணங்களை கூறி வருகின்ற போதிலும், அந்தக் காரணிகளை சீரமைக்க எதுவும் உருப்படியான யோசனைகளை சம்பந்தப்பட்டவர்கள் முன்வைப்பதாகவும் இல்லை. அப்படி ஒருசிலர் முன்வைத்தாலும் அதனைப் பரிசீலித்து விரைந்து உறுதியான நடவடிக்கைகளை சமூகப் பொறுப்புடன் எடுப்பதற்கு அதற்குப் பொறுப்பான துறை சார்ந்தோர் ஆர்வம் காட்டுவதாகவும் இல்லை.

இப்படி எழுதுவது குறித்து குறிப்பிட்ட துறை சார்ந்த அதிகார நிர்வாக வட்டத்தினர் சீற்றம் கொள்ளலாம். தங்களை நியாயப்படுத்தவும் முனையலாம். ஆனால், மறுப்புகளும், நியாயப்படுத்தும் அறிக்கைகளும் தம் நெஞ்சறிய செய்யும் பொய்யான கருத்துக்களையே உள்ளடக்கியதாக இருக்கும் என்பதை அவர்களே அறிவர்.

ஒருபுறம் கடந்த பலதசாப்த காலமாகவே - குறிப்பாக 1960களில் தரப்படுத்தல் என்ற திட்டம் அமுல்படுத்தப்படத் தொடங்கிய காலம் முதலே உயர்கல்விக்கான வாய்ப்புகளைப் பெறுவதில் தமிழ் மாணவர்களுக்கான திறமை மற்றும் ஆற்றலின் அடிப்படையிலான உரிமைகள் திட்டமிட்ட வகையில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் கட்டம் கட்டமாக நிராகரித்த சிங்கள பேரினவாத அரசுகள் - கல்வி தொடர்பாக தமிழ் மக்களை - மாணவர்களை எப்படியெல்லாம் ஒதுக்கி வந்தது என்பதை விபரிக்க வேண்டிய அவசியமேயில்லை.

மூன்று தசாப்தகாலப் போர் தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை எப்படியெல்லாம் வடக்கு - கிழக்கில் பாதிப்புக்குள்ளாக்கியது என்பதை அனைவரும் அறிவர்.

பாடசாலைகளை குண்டு வீசி அழித்தும், மாணவர்களை எந்தவிதமான நியாயமுமின்றிக் கொன்றும் கல்விக்கான வசதிகளை வழங்குவதில் பாரபட்சம் காட்டியும், பொருளாதாரத் தடைமூலம் கல்விசார் உபகரணங்களுக்கு கட்டுப்பாடு விதித்தும் மேலும் பல்வேறு அழுத்தங்களை வேண்டுமென்றெ பிரயோகித்தும் தமிழ் மாணவர்களின் கல்வியை சீர்குலைக்க அரசு காரணமாயிற்று.

பாடசாலைகளை இராணுவ முகாம்களாக்கிய கொடுமையும் சிங்கள அரசுகளால் மேற்கொள்ளப்பட்டதை முழு உலகும் அறியும்.

கல்வியை அரும் பெரும் செல்வம் என நம்பிய தமிழினம் தங்கள் சந்ததியினரின் அறிவு வளர்ச்சிக்கு வைக்கப்படும் அரசு ஆப்புக் குறித்து - ஆழ்ந்து கவலைப்பட்டபோதும் அவர்கள் சோர்ந்து போனது கிடையாது. இடம்பெயர்ந்து இடர் சுமந்து அகதிகளாக அலைந்த போதிலும், குப்பிவிளக்கின் துணையோடு தம்பிள்ளைகளின் கற்றல் முயற்சிகளுக்கு தூண்டுகோலாக இருந்த தமிழ் மக்கள், தற்போது நிலவும் சூழல்களால் அவர்களின் வாரிசுகளின் கல்வித்தரம் மட்டுமல்ல கற்றலுணர்வும் மழுங்கிவருவதை ஏக்கத்துடன் நோக்கத்தொடங்கியுள்ளனர்.

இடம்பெயர்வின்பின்னான காலகட்டத்தில், அதாவது சுமார் ஏழாண்டுகாலப்பகுதிக்குள் குடாநாட்டுமாணவர்களின் கல்வித்தரம் ஒரு சரிவுநிலையை நோக்கிச் செல்லக் காரணமான விடயங்கள் பலவாகும். இராணுவஅழுத்தம், உளவியல் ரீதியிலான பாதிப்புகள், கட்டுப்பாடற்ற சமூகசீரழிவுச்சாதனங்களின் புழக்கம் அதிகரிப்பு, வெளிநாட்டு பணத்தின் அபரிமிதமான வருகை, திட்டமிட்ட கலாசார சீரழிவு செயற்பாடுகளின் பரம்பல், இலத்திரனியல் ஊடகங்களின் ஊடான மூன்றாம்தர இறக்குமதி, கலை பண்பாட்டு நிகழ்வுகளின் ஊடுருவல், பல்வேறு காரணிகளால் சமூக உறவுகளில் உருவான சிதைவுகள் எனப் பலவிடயங்கள் அதிகளவில் பாதித்தது - இளைய சமூகத்தை குறிப்பாக மாணவ சமூகத்தைத்தான்.

இந்தப் பாதிப்புகளால் மனப்பிறழ்வுக்குள்ளான மாணவ சமூகம், கற்றலையும் பாடசாலை செல்வதையும் பொழுதுபோக்கு விடயமாகக் கருதத் தொடங்கியதால் ஏற்பட்ட ஆபத்தின் பின்விளைவுகளையே நாம் இப்போது எதிர்கொள்கிறோம்.

பாடசாலைகள் வெறுமனே வரவைப்பதியும் நிலையமாக மட்டும் மாறிவிட, தனியார் கல்விநிலையங்கள் நிரம்பிவழிகின்றன என்றால் அதற்கான காரணம் அசட்டைசெய்துவிடக்கூடியதல்ல...!

பாடசாலை மாணவர்களில் அதிகபட்சமானவர்கள் சிகரட், மது சிலவேளைகளில் போதைவஸ்துக்களின் அடிமையாகியுள்ளதை - மூலைமுடுக்குகளில் தனியார் கல்வி நிலையங்களை ஒட்டியிருக்கும் சிற்றுண்டிச்சாலைகளுள் திரளும் புகைமண்டலத்தை விலக்கிப்பார்த்தால் தெரியும்.

இந்தச் சூழல் ஏன் உருவானது? இதிலிருந்து இவர்களை மீட்பது எப்படி? யார் இதனை மேற்கொள்வது?


ஆழமாக யோசிக்கப்படவேண்டிய - அவசியம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய விடயம் இதுவாகும்.

சிறுமை கண்டு பொங்கும் சிந்தனையாளராக இருக்க வேண்டிய மாணவ சமூகம், சின்னத்தனங்களின் அடையாளமாகி தம்மையும், தமது பெற்றோரையும், தாம் வாழும் சமூகத்தையும் மேம்படுத்த மறந்தவர்களாக, தெருவலம் வருவது ஆரோக்கியமான சமிக்ஞையேயல்ல...

சம்பந்தப்பட்டோர் அறிக்கைகள் விட்டு அமர்வதை விடுத்து, ஆக்கபூர்வமாக சிந்தித்து செயற்பட விழிப்புணர்வு கொள்ள வேண்டிய கட்டம் இதுவாகும்.

இல்லையேல் நாம் கல்வியற்ற ஒரு தலைமுறையை உருவாக்கிவிட்ட பழிப்புக்குள்ளாகி விடுவோம்!

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# விடுதலைப் போராட்டங்களில் பயங்கரவாதிகளான தலைவர்கள்

உலகில் எத்தனையோ நாடுகளில் விடுதலைப் போராட்டங்கள் நடந்தன. இன்றும் எத்தனையோ நாடுகளில் விடுதலைப் போராட்டங்கள் நடக்கின்றன. இவை நாட்டுக்கு நாடு வேறுபட்டவையாக இருக்கின்றன. நமது நாட்டில் தமிழ் மக்கள் நடத்தும் போராட்டம்போல வேறு நாடுகளிலும் நடைபெற்றிருக்கின்றனவா? என்று கேட்டபடியே வந்து என் எதிரில் உட்கார்ந்தார் நண்பர் பரமசிவம்.

எதைக் குறிப்பிட்டு இப்படிக் கேட்கிறீர் என்று கேட்டேன்.

இல்லை எமது விடுதலைப் போராட்டத்தை இன்னமும் பயங்கரவாதப் போராட்டமாக சிங்கள, பௌத்த மேலாண்மைவாத ஆதிக்க சக்திகளும் மேலாண்மைவாதிகளும் அவர்களுடைய ஊடகங்களும், உலகம் முழுவதிலும் பிரசாரம் செய்துவருகின்றன. இவற்றுக்கு ஆதிக்க சக்திகளுடன் அண்டிப் பிழைக்கும் நம்மவர் சிலரும்கூட உதவியும் ஒத்துழைப்புமளித்து வருகிறார்களே. இதனால்தான் நான் இந்தக் கேள்வியைக் கேட்டேன் என்றார் பரமசிவம்.

இங்கிலாந்து வெள்ளைக்காரர், இந்தியா, இலங்கை போன்று வேறு பல நாடுகளையும் பிடித்துத் தமது ஆட்சியை நடத்திவந்தார்கள். காலப்போக்கில் மக்கள் விழிப்புணர்ச்சிகொண்டு நமது நாட்டு வளங்களைக் கொள்ளையடிப்பது மட்டுமல்லாமல், நம்மையும் அடிமைகளாக நடத்துகிறார்கள். எங்கிருந்தோவந்த இவர்களை இனியும் நம்மை அடிமைகளாக நடத்துவதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்று குரல் கொடுத்தனர். ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் முதலில் இந்தியாவில்தான் வெள்ளையரின் ஆட்சிக்கு எதிராகக் குரல் எழுப்பப்பட்டதென்று நினைக்கிறேன். இங்குதான் முதலில் 1857ஆம் ஆண்டில் வெள்ளையருக்கெதிரான கலகம் தொடங்கியதென்று நினைக்கிறேன். இதை வெள்ளையர் சிப்பாய்க்கலகம் என்று கூறி அடக்கிவிட்டனர். ஆனாலும் இந்த முதல் போராட்டம் முற்றாக அடங்கிப்போய் விடவில்லை. நாட்டின் பல பகுதிகளிலும் ஆங்காங்கே சிறுசிறு கலகங்களாகத் தொடர்ந்தன. இந்தக் கலகங்களைத் தொடர்ந்து, இந்திய தேசியத் தலைவர்கள் கூடி, விடுதலைப் போராட்டத்துக்கு ஒரு அமைப்பை உருவாக்கினர். இந்த அமைப்பில் தென் ஆபிரிக்காவில் இன ஒடுக்குமுறைக்கு எதிராக சாத்வீக முறையில் போராட்டம் நடத்திய மோகன்தாஸ் கரம்சந்த்காந்தியும் வந்து இணைந்துகொண்டார். காந்திஜி இந்தியப் போராட்டத்துக்கு தேசியத் தலைவர்களால் அமைக்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸுக்குத் தலைமை தாங்க அழைக்கப்பட்டார். சாத்வீகப் போராட்டங்கள் மூலமே வெள்ளையனை வெளியேற்றுவதென்று காந்தியின் தலைமை தீர்மானமாக இருந்து, பல போராட்டங்களை நடத்தியது. சாத்வீகப் போராட்டத்தினால் வெள்ளையனை வெளியேற்றமுடியாது. ஆயுதம் ஏந்திப் போராடவேண்டும் என்று நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் போன்ற இளைஞர்கள் எழுந்தனர். நேதாஜி வெளிநாடுகளுக்குச் சென்று தமது இந்திய தேசிய காங்கிரஸுக்குப் பலம் திரட்டினார். இளைஞர்கள் ஆயுதப் போராட்டங்களிலும் ஈடுபட்டனர். காந்தியின் சாத்வீகப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த அதே சமயம் – வெள்ளையருக்கெதிராகக் கொலைகளும், கொள்ளைகளும்கூட நடைபெற்றன. என்றாலும் இந்திய மக்கள் இந்திய விடுதலைக்கு ஒன்று திரண்டனர். ஒருசிலர் இப்போது நம்ம நாட்டில் ஆதிக்க சக்திகளுடன் அண்டிப் பிழைப்பது போன்று, அன்றும் இந்தியாவில் வெள்ளையனுக்கு அடிவருடத்தான் செய்தனர். ஆனால் விடுதலைக்கு மக்கள் ஒன்றுதிரண்டதால் அடிவருடிகள் மறைந்தனர். இந்தியாவில் விடுதலை வேண்டி ஆயுதப் போராட்டத்தை ஆதரித்தவர்கள் தற்கொலைப் படைகளாகவும் செயற்பட்டனர். மதுரைக்கருகில் மணியாச்சி ரயில் நிலையத்தில் திருநெல்வேலி மாவட்ட கலக்டரான ஆஷ்துரை என்ற வெள்ளையன் ரயிலில் வைத்து வாஞ்சிநாதன் என்ற இளைஞனால் சுட்டுக் கொல்லப்பட்டான். பின் வாஞ்சிநாதனும் தற்கொலை செய்துகொண்டான். இது உதாரணத்துக்கு ஒரு சம்பவம். விடுதலைப் போராட்டத்தில் வன்செயல்கள் அதிகரித்ததால், வெள்ளையர் விழிபிதுங்கினர். வன்செயல்களுக்குப் பணிந்துவிட்டதாகக் காட்டிக்கொள்ளாமல், காந்தியின் சாத்வீகப் போராட்டத்துக்கு மதிப்புக் கொடுத்து, வெளியேறுவதாகச் சொல்லி இந்தியாவுக்கு விடுதலை கொடுத்து வெளியேறினர். நேதாஜி, போஸ் உட்படத் தங்கள் உயிரைத் துச்சமென மதித்த பகவத்சிங், குருதேவ் போன்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருமே வெள்ளையர்களால் பயங்கரவாதிகளாகவே கருதப்பட்டனர். பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டனர் என்று சொன்னேன்.

இந்தியாவைப் பின்பற்றி பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகள் விடுதலைப் போராட்டங்கள் நடத்தவில்லையா என்றார் பரமசிவம்.

இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் வெள்ளையர் திணறியபோது, இந்தியாவுக்கு விடுதலை கொடுத்தால், இந்தியாவின் ஒரு பகுதியில் பெரும்பான்மையாக வாழும் எங்களுக்கும் விடுதலை வேண்டும். அந்தப் பகுதியை பாகிஸ்தான் என்று பிரித்துக்கொடுங்கள் என்று இந்திய முஸ்லிம்களுக்குத் தலைமை ஏற்ற முகமதலி ஜின்னா வெள்ளையரிடம் கோரிக்கை வைத்தார். பாகிஸ்தானைப் பிரித்துக்கொடுக்காவிட்டால் பெரும் அழிவு ஏற்படுமென்றார். இதை காந்திஜி எதிர்த்தார். ஆனால் பிரித்துக்கொடுப்பதுதான் சரியான வழியென்று ராஜாஜி வாதாடினார். பாகிஸ்தான் உருவானது. கையிலிருந்த சிகரட்டின் சாம்பல்கூட விழாமலே ஜின்னா பாகிஸ்தானைப் பெற்றார் என்று பின்னர் ஜவஹர்லால் நேரு, போராட்டம் எதுவுமின்றிப் பாகிஸ்தான் உதயமானதைச் சொல்லிக்காட்டினார் என்றேன்.

இலங்கை எப்படி விடுதலை பெற்றது என்றார் பரமசிவம்.

இலங்கைக்கும் விடுதலை வேண்டும் என்று இந்திய விடுதலைப் போராட்டத்தினால் உந்தப்பெற்ற யாழ்ப்பாணக் கல்விமான்கள் குரல்கொடுத்தனர். நேரு, காந்தி, சரோஜினி நாயுடு மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த விடுதலைப் போராளிகளை யாழ்ப்பாணத்துக்கும், இலங்கைக்கும் அழைத்து இந்திய விடுதலைக்கு ஆதரவும், வாழ்த்தும் தெரிவித்து நிதி திரட்டியும் இவர்கள் கொடுத்தனர். இவர்கள் யாழ்ப்பாண 'வாலிபர் காங்கிரஸ்' என்ற ஓர் அமைப்பையும் விடுதலைக்குக் குரல் கொடுப்பதற்காக அமைத்தனர்.

தென்னிலங்கையில் பொதுவாகச் சிங்களத் தலைவர்கள் வெள்ளைக்காரர்களின் தயவையே நாடிநின்றனர். முதலியார், கேட் முதலியார் என்ற பட்டம் பின்னர் சேர் பட்டம் போன்றவற்றையும் அவர்கள் எதிர் பார்த்திருந்ததாகச் சொல்லப்படுகிறது. வீரபுரான் அப்பு என்ற ஒருவீரன் தென்னிலங்கையில் வெள்ளையனை எதிர்த்துப் போராடினான் என்று பின்னர் சொல்லப்பட்டது. இப்போது இந்த வீரனுக்கு ஒரு சிலையும் எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன் னேன்.

அப்போது வெள்ளையனை எதிர்த்து இலங்கையில் பயங்கரவாதி என்று யாரும் முத்திரை குத்தப்பட்டதில்லையா? என்று பரமசிவம் கேட்டார்.

விடுதலைப் போராட்டமே இலங்கைக்கும் புதிய சமாச்சாரமாச்சே. தமிழீழ விடுதலைப் போராட்டம்தான். இலங்கையில் விடுதலைப் போராட்டம் என்ன என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறது. ஆனால் வெள்ளைக்காரனைப் பின்பற்றி நமது விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாத இயக்கமாக்கியும். விடுதலைப் போராட்ட வீரர்களை பயங்கரவாதிகளாக்கி முத்திரை குத்தியும் இலங்கையில் தமிழ் இன ஒழிப்பில் முன்னேறுவதற்கு உலக நாடுகளையும் பகடைக்காய்களாகப் பயன்படுத்த சிங்கள பௌத்த மேலாண்மை வாதிகள் திட்டமிட்டுச் செயற்படுகின்றனர் என்றேன்.

ஆபிரிக்காவில் கென்யா நாட்டில் வெள்ளையருக்கு எதிராக விடுதலைப் போராட்டம் நடத்திய ஜோமோ கென்யாட்டா என்ற தலைவர் – வெள்ளையர்களால் படுபயங்கரமாகச் சித்திரிக்கப்பட்டார். கென்யாவில் சுதேசிகள் பூமராங் என்ற ஆயுதத்தை வெள்ளையருக்கு எதிராகப் பயன்படுத்தினர். இந்த ஆயுதத்தை வெள்ளையனை நோக்கி வீசினால், அது அவனது தல்லையைக் கொய்துவிட்டு, அதை வீசியவனிடமே வந்துசேர்ந்துவிடுமாம். பயங்கரவாதியென்று கைதுசெய்யப்பட்ட கென்யாட்டா பல வருடங்கள் சிறை வைக்கப்பட்டார். பின்னர் அவர் விடுதலை செய்யப்பட்டார். கென்யாவும் விடுதலை பெற்றது. இதன் பின்னர் கென்யாட்டா தேசியத் தலைவனாக வெள்ளையர்களால் போற்றப்பட்டார். இதேபோல் சைப்பிரஷில் ஆர்ப்பிஷப் மக்காரியோஸ் பயங்கரவாதியாக சித்தரிக்கப்பட்டு, பின்னர் தேசியத் தலைவராகப் போற்றப்பட்டார். நெல்சன் மண்டேலாவும், யசீர் அரபாத்தும் பயங்கரவாதிகளாக முத்திரை குத்தப்பட்டவர்களே என்று சொன்ன பரமசிவம் – நமது விடுதலைப் போராட்டமும், தமிழ் மக்கள் தங்களை உணர்ந்து ஒரே குரலில் விடுதலை முழக்கத்துடன் ஒத்துழைத்து வெற்றி ஈட்டித் தருவார்கள் என்று நம்புகிறேன். விரைவில் விடுதலை கிடைக்கும். இன்று பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டவர்களை முத்திரை குத்தியவர்களே தேசியத் தலைவர்களாகப் பாராட்டும் நாள்வரும். அது வெகுதூரத்தில் இல்லையென்று சொன்னபடியே எழுந்தார் பரமசிவம்.

மொழிபெயர்ப்பு

வல்வையூரான்.

# பொறியில் சிக்கிய ரத்வத்த;

*(கடந்தவாரத் தொடர்ச்சி....)*

தற்போது நேரம் பிற்பகல் இரண்டைக் கடந்துவிட்டிருந்தது. எமது பயணம் மிகவும் கடினமானது. எனது பாதத்தில் சத்திரசிகிச்சை செய்ததன் காரணமாகப் பாதத்துக்குப் போட்டிருந்த இருப்பது குறித்த சமிக்ஞைகளை வழங்குவதற்கு முறைகள் எதுவும் இல்லாமையால் எங்களுக்கு அனுகூலம் கிடைக்கவில்லை.

ஜெனரல் அநுருத்த தலைமையிலான குழுவினர், அந்தப் பாரிய காட்டினூடாக மேலும் 2 கிலோ

**1996.12.26 இல் வடபகுதி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது ஹெலிகொப்டர் பழுதடைந்ததால் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள காட்டுப் பகுதியில் தரையிறங்கிய முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வதத - பொறியில் இருந்து தப்பிவந்த சம்பவத்தை விபரிக்கும் இந்தத் தொடர் 'லங்காதீப' வார இதழில் இருந்து மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டது.**


இரும்புப் பட்டிகளில் தசை அகப்பட்டு, கால் வலியைக் கொடுத்தது. ஆனால் யாருக்கும் அதனைக் கூறவில்லை. மற்றவர்கள் செல்கின்ற வேகத்துக்கு நானும் செல்வதற்கு முயற்சி செய்தேன். செல்ல முடியாமல் இருந்தாலும், வேறெதையும் செய்வதற்கு வேறு வழி இருக்கவில்லை. ஜெனரல் அநுருத்த ரத்வத்த கூறினார்.

பயணத்தின் களைப்பையும், பயங்கரத்தையும் மறப்பதற்காக அநுருத்த ரத்வத்த நகைச்சுவைக் கதைகளைக் கூறினார். யுத்த களத்தின் பழைய ஞாபகங்களை நினைவுகூர்ந்தார். பாரதூரமான சந்தர்ப்பங்களில் அழைக்கப்பெற்ற பாதுகாப்பு அதிகாரிகளையும், அவசர கூட்டங்களில் நிகழ்ந்த, மறக்க முடியாத நிகழ்வுகளையும் நினைவு கூர்ந்தார்.

கதை - பயணத்துக்கு பல்லக்கு எனக்கூறுவது, இந்தப் பயங்கரமான பயணத்துக்குப் புதுமையான விதமாகப் பொருந்தியிருந்தது.

"இந்தவேளை விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர்கள் எங்களுக்கு மேலாக வானில் பறந்தன. எங்களுக்கு நிகழ்ந்த கதி தொடர்பாகப் பாதுகாப்புப் பிரிவு தெரிந்து கொண்டுள்ளது என்ற உணர்வு எமக்கு உண்டாகியது. ஆனால் வெடித்துப்போன ஹெலிகொப்டரில் நாம் இருப்போமென்ற பிழையான விளக்கம், அவர்களுக்கு இருக்குமோ, இல்லையோ என்பது தெரியாமையால், எங்களுக்குப் பயம் தோன்றியது. எனவே எங்களுக்கு மேலால் பல ஹெலிகொப்டர்கள் பறந்தாலும், நாம்

மீற்றர அளவுக்கு முன்னே சென்றனர். அவர்கள் இதன்போது நீர்தேங்கிய குழியொன்றைக் கண்டனர். அப்போது தான் குளிக்க வேண்டுமென ரத்வத்த கூறினார். வேண்டாம் சேர் குளித்துக்கொண்டிருப்பது ஆபத்



தானதென இராணுவத்தளபதி தளுவத்த கூறினார். ஆனால் பயணத்தின் களைப்பைப் போக்கக் குளிக்கவேண்டுமென ரத்வத்தவுக்குத் தோன்றியது. இறுதியில் குளிக்க அவருக்கு அனுமதி கிடைத்தது. இந்த நீர்க்குழியில் அனைவரும் தமது உடம்பைக் கழுவிக்கொண்டனர். அதன்பின் மனதுக்கு நல்ல இதமாக இருந்தது. போகவேண்டிய தூரம் செல்வதற்கு அதிக சக்தி கிடைத்தது.

சிறிது தூரம் செல்ல எமது தொலைத்தொடர்பு கருவிக்கு செய்தி கிடைத்தது. எங்களோடு இருந்து விரைவாக வவுனியாவுக்குச் சென்றவர்களிடமிருந்தே எமக்குச் செய்தி கிடைத்தது. அதன்படி அவர்கள் எந்தவித அசம்பாவிதமும் இன்றி வவுனியா சென்றமை குறித்து நாம் தெரிந்துகொண்டோம். அதற்கும் மேலதிகமாக வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு எமது தொலைத்தொடர்பு சாதனம் மூலம் தொடர்புகொண்டோம். அப்பொழுது அந்தப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த பெண் பொலிஸ், எமது நிலைமையைத் தெரிந்து கொண்டிருக்கவில்லை. நாம் முழுமையாக எமது நிலைமையையும் தெரிவிக்க முடியாது. அவ்வாறு நாம் முழு விபரத்தைத் தெரிவித்தால், அது எதிரியின் கைகளுக்குக் கிடைக்கக்கூடும். நாம் புதுமையான துன்பத்தை அனுபவித்தோம்.

எனினும் பெண் பொலிஸ் எம்முடன் தொலைத்தொடர்பு சாதன மூலம் உரையாடியதை அவதானித்த பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி, தொலைத்தொடர்பு சாதனத்துக்கு அருகில் வந்தார். பொலிஸ்மா அதிபர் ராஜகுரு அவருக்கு சமிக்ஞைமூலம் தகவல் தெரிவித்தார்.

இதனையடுத்து நான்கு ஹெலிகொப்டர்கள் பறந்து சென்றன. ஆனால் ஜெனரல் ரத்வத்த குழுவினர் இருந்த இடத்தை ஹெலிகொப்டர்களிலிருந்து வந்தவர்கள் தெரிந்துகொண்டிருக்கவில்லை. தற்போது ஹெலிகொப்டர்கள் தொலைவில் தரையிறங்குவதையும், அவற்றிலிருந்து படையினர் இறங்கி நிலையெடுப்பதையும் ஜெனரல் ரத்வத்த உட்பட்ட குழுவினர் கண்டனர். எனினும, அவர்களுக்கான செய்திப் பரிமாற்றத்தை வழங்கும் முறைதான் இல்லை.

பொலிஸ்மா அதிபர் ராஜகுருவும், அவரது உதவியாளரும் இதனபோது புதுமையான மார்க்கமொன்றையும் பாவித்தனர். அவர்கள் தமது சீருடையைக் கழற்றி, அதிலிருந்த பித்தளைப் பொத்தான்களில் ஒளிபடும் விதமாக மேலே உயர்த்தினர். இதனால் பித்தளைப் பொத்தான்கள் பளிச்செனத் தெரிந்தன.

இதனை வானத்தில் பறந்து கொண்டிருந்த விமான ஓட்டிகள் புரிந்துகொண்டனர். தற்போது என்னால் மேலும் ஒருஅடிகூட நடக்க முடியவில்லை. இதனால் நான் அந்த இடத்திலேயே இருந்தேன். இந்த நிலையில் எமக்கு அண்மையாக ஹெலிகொப்டரொன்று தரை இறங்கியது. எமது கடினமான பயணம் முடிவடைகின்றபடியால், நாம் கலவரமடையவில்லை. அப்போது நான் வரவில்லையென கேலியாகக் கூறினேன். இந்த இடத்திலிருந்த அனைவருடனும் கேலிகள் செய்தேன். இறுதியாக அனைவரும் சேர்ந்து, என்னைத் தூக்கிச்சென்று ஹெலிகொப்டரில் வைத்தனர். அது மாலை 4 மணியளவில் வவுனியா விமானப் படை முகாமில் தரையிறங்கியது.

2000 பேரளவான படையினர் வானத்தைநோக்கி வேட்டுகளை சந்தோஷமிகுதியால் தீர்த்ததுடன், ஹெலிகொப்டரைச் சுற்றிவளைத்தனர். கொழும்பிலிருந்து மருத்துவக் குழுவினரும் வந்திருந்தனர். விமானப்படைத் தளபதி ஒலிவர் ரணசிங்கவும் வவுனியாவுக்கு வந்திருந்தார்.

நான் அலரி மாளிகையுடன் தொடர்பை ஏற்படுத்திக் கதைத்தேன். ஆனால் அங்கு ஜனாதிபதி இல்லை. பின்பு நான் தெரிந்துகொண்டது, அந்தவேளை எமது தகவல்களை அறிவதற்காக ஜனாதிபதி நடவடிக்கைத் தலைமையகத்தில் இருந்தமையை. பின்னர் நாம் குளித்து, புதிய ஆடை அணிந்து, இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடினோம்.

இதறகிடையில் எனக்குத் தொலைபேசி அழைப்புக்கிடைத்தது. அந்த அழைப்பை ஜனாதிபதி எடுத்திருந்தார். இன்னமும் அங்கு என்ன செய்கின்றீர்கள். உடனே கொழும்புக்கு வாருங்கள் எனத் தெரிவித்தார். அவ்வாறே செய்வதாக ரத்வத்த தெரிவித்தார். எனினும் இராணுவ அதிகாரிகளுடன் ரத்வத்த தொடர்ச்சியாகக் கலந்துரையாடல்களை நடத்தினார். தற்போது நேரம் மாலை நாலரை மணியாகியிருக்கும். நாம் வெலி ஓயா செல்வதற்கே வந்தோம். தற்போது நான் அங்கு செல்லவேண்டுமெனத் தெரிவித்தேன். நாடாளுமன்ற உறுப்பினர் சுமதிபாலவும் அதற்கு இணக்கம் தெரிவித்தார். நாம் நாலரை மணியளவில் நாம் வெலி ஓயா சென்றோம். அங்கு எம்மை மனிதர்கள் வியப்புடன் பார்த்தனர். அங்கு எமது வேலையை நிறைவு செய்த பின்னர் நான் ஹெலியில் இரத்மலானை சென்று, அங்கிருந்து கொழும்புக்குச் சென்றேன்.

பயங்கரமான பயணத்தின் இறுதியான சில மணித்தியாலங்கள் தொடர்பாகக் கூறிமுடித்த ஜெனரல் அநுருத்த ரத்வத்த, நீண்ட நெடுமூச்சை வெளியிட்டார். பயணத்தின் பயங்கரம் அந்த நெடுமூச்சில் தெரிந்தது. (முற்றும்)

பகுதி 70

சங்கர்

# காற்றே எம் கதை கேளாயோ....
# அலையே எம் நிலை உணராயோ..

*(தொடர்ச்சி....)*

இந்தக்குடியேற்ற முயற்சி மற்றும் சுனாமி தொடர்பான அவலம் என்பன இந்தமுறை கோணேசர் ஊர்வலத்திலும் எதிரொலித்தன.



ஊர்வலத்தில் பாடும் பஜனையின் போது 'ஓம் சிவாய சங்கரா' என இறுதியில் வரும். அதில் இடைச் செருகலாக

'ஏனடா இந்த நிலை ஓம் சிவாய சங்கரா

ஏனுனக்கு கேட்கலையோ ஓம் சிவாய சங்கரா

மக்கள் படும் துயரம் ஓம் சிவாய சங்கரா

மாளிகைக்கு கேட்கலையோ ஓம் சிவாய சங்கரா

ஊரூராய் அலைகிறோமே ஓம் சிவாய சங்கரா

ஊனக் கண்ணால் காணலையோ ஓம் சிவாய சங்கரா'

எனவும் பாடிக்கொண்டு சென்றனர். இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போதும் அவ்வாறு தான் வள்ளி திருமண நாடகத்தினூடே தேச விடுதலைப் பாடல்கள் வந்தன. 'கதர்க் கொடி பறக்குதே' என்றும் பாடல்கள் வந்தன. அதே போலத்தான் கோணேசர் உற்சவத்திலும் சந்திரிகாவே என்று சொல்ல வேண்டிய இடங்களில் ஓம் சிவாய சங்கரா எனச் சொன்னதாகதான் எனக்குத் தோன்றியது. ஏனெனில் 'ஊனக் கண்' என்பது மனிதரிடமே இருப்பதாகக் கூறப்படுவதுண்டு. இறைவனிடம் இருப்பதாக கூறப்படுவதை 'ஞானக் கண்' என்றே அழைப்பர்.

திருமலை சல்லிப் பகுதியைப் பார்வையிட்ட போது, அங்கு இருவர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரியவந்தது. மாலா என்பவரும் அவரது பிள்ளையுமே உயிரிழந்தவர்களாவர். அதேவேளை சல்லியைச் சேர்ந்த 25இற்கும் மேற்பட்டோர் முல்லைத்தீவில் சுனாமியால் உயிரிழந்துள்ளனர். தொடர்ந்து அடம்போடை என்னும் இடத்தில் உள்ள நலன்புரி நிலையம் ஒன்றைச் சென்றடைந்தேன்.


அங்கு ஒரு கூடாரமொன்றில் தங்கியிருந்த முருகுப்பிள்ளை தயாளன் (வயது 28) என்பவரைச் சந்தித்தேன். தனது துணைவியார் பரமேஸ்வரி (வயது 27), குழந்தை சந்திஜா (வயது 4) ஆகியோரை இவர் இழந்துள்ளார். இவருடனான உரையாடல் பின்வருமாறு இருந்தது.

'வேலூர் தான் எங்கட இடம். கடல்தொழில் தான் செய்யிறனான். காலையில நான் போட் இழுக்கக் கரைக்குப் போயிருந்தன். நான் தண்ணியைக் கண்டு வீட்டை ஓடியர, றோட்டாலயும் தண்ணி பறக்குது. நான் கானால ஓடி வர முடியாதெண்டு மாமியிட வளவுக்கால பூந்து ஓடினன். அப்ப தண்ணிகிட்ட வந்திட்டுது. என்ட மகன் தோளைக் கட்டிப் பிடிச்சிட்டார். நான் மனிசியைக் கட்டிப் பிடிச்சிருந்தனான். மனிசி மகளைக் கட்டிப் பிடிச்சிருந்துது. கம்பி வேலிக்குக் கிட்ட வர கழுத்தளவுக்குத் தண்ணி வந்திட்டுது. மற்ற ஒரு அலை அடிக்க நாங்கள் பிரிஞ்சிட்டம் அப்பவும் மகன் என்னைக் கை விடல்ல.

நாங்கள் தண்ணியும் குடிச்சிட்டம். அப்ப எங்கட மாமியாற்ற கடையில் இருந்த பிரிஜ் ஒன்று மிதந்து வந்துது. அதை எட்டிப் பிடிச்சுக் கொண்டு போக ஒரு போஸ்ட்டை அடைஞ்சம். அந்தப் போஸ்ட்டைப் பிடிச்சு ஒரு வீட்டுக்கு மேல ஏறிட்டம்'

'அது மாடி வீடா?'

'இல்லை சும்மா வீடுதான். நாங்கள் ஏறிக்கொஞ்ச நேரத்தால தண்ணி வத்தில போகுது. அப்ப நான் மனிசிட பேரைக் கத்திக்



கொண்டு தேடி வந்தன். எங்கட சித்தப்பான்ரை வீடொண்டு இடிஞ்சு போய்க் கிடந்துது. அதுக்குள்ள தான் அவ கிடந்தா. கிளறித்தான் அவவை எடுத்தனாங்கள். மகள் கிடைக்கல்ல. சம்பவம் நடந்த ஞாயிறுக்கு அடுத்த ஞாயிறுதான் அவவை எடுத்தது'

'அவவை எங்க எடுத்தனிங்கள்?'

'நாங்கள் தப்பியிருந்த வீட்டின்ரை கக்கூஸ் பிற்றுக்கு மேல

*(தொடரும்.....)*

# தவக்கால நற்சிந்தனை

## அவர் அங்கே இல்லை (மத்.28:6)

யேசுவை அடக்கம் செய்த நாள் ஆயத்தநாள். யேசுவின் உடலை அவரோடு கூட இருந்த சீடர்கள் தன்னும் அடக்க செய்ய முன்வரவில்லை. அவர்கள் யூதர்களுக்குப் பயந்து ஒளிந்து கொண்டார்கள். அவரோடு உண்டு, குடித்து, அவர் செய்த புதுமைகளுக்கு சாட்சியாயிருந்தவர்கள். இவர்களிடம் கூட அவரின் இறந்த உடலை அடக்கம் செய்ய முன்வரவில்லை. யேசுவை மறுதலித்து, பின்பு தன் தவறுக்காக மனங்கசிந்து அழுத முதற் சீடர் பேதுருவுக்கும் கூட துணிவு பிறக்கவில்லை. இச்சீடர்கள் அனைவரும் அவரின் மரணத்தை எதிர்பார்க்கவில்லை. காரணம் அவர் தமது எதிரிகளை முறியடித்து வெற்றிவாகை சூடுவார் என நம்பியிருந்தனர். அவர் மூன்று முறை தம்பாடுகளையும், மரணத்தையும், உயிர்ப்பையும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லியும் கூட, அவர்களால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. இதன்விளைவு அவநம்பிக்கை, பயம். இதனால் ஓடி ஒளிந்து கொண்டார்கள். இவ்வேளை தலைமைச் சங்க உறுப்பினரான அரிமத்தியா ஊர் யோசேப்பு, தலைமைச் சங்கத்தினரின் திட்டத்துக்கும், செயலுக்கும் இணங்காதவர். துணிவுடன் பிலாத்துவிடம் உடலைக் கேட்டு அடக்கம் செய்தார். இன்று இரவிலே, பாஸ்கா திருவிழிப்பு சடங்கிலே இயேசுவின் உயிர்ப்பு அறிவிக்கப்படுகின்றது. எல்லாப் பாவங்களின் அடிமைத்தனத்திலிருந்தும், பாவம் விளைவித்த சாவினின்றும் பெறுகின்ற முழுவிடுதலையாக யேசுவின் மரணமும் உயிர்ப்பும் அமைந்துள்ளதை நற்செய்தி கூறுகின்றது. யேசுவின் மரணம் இருளின் ஆட்சியைக் குறித்தாலும் அவரின் உயிர்ப்பு அருளின் வெற்றி என்ற இறை நம்பிக்கையோடு வாழ்வோம்.



மோ. தார்சீசியஸ்



கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான உகண்டாவில் இன்னும் சில மாதங்களில் அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது. 20 ஆண்டுகளுக்குப் பிறகு பல கட்சிகள் போட்டியிடும் முதலாவது தேர்தல் இது. இந்தத் தேர்தலில் அதிபர் யோவேரி முசிவெனி மீண்டும் போட்டியிடக் கூடாது என வலியுறுத்தி, பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சம்பாலா நகரில் போராட்டம் நடத்திவருகிறார்கள். அதிபர் முசிவெனியின் கொடும்பாவியை அவர்கள் எரித்த காட்சி.




# சூரிய குடும்பத்தைச் சேராத 2 கிரக ஒளிவீச்சு கண்டுபிடிப்பு

(வொஷிங்ரன்)

சூரியகுடும்பத்தைச் சேராத 2 கிரகங்களில் இருந்து வெளிவரும் ஒளியை விண்வெளி விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். சூரியகுடும்பத்தில் பூமி, செவ்வாய், புதன், வெள்ளி, சனி, என 9 கிரகங்கள் உள்ளன. அவை சூரியனைச் சுற்றிவருகின்றன.

அண்டத்தில் சூரியன் போல பல நட்சத்திரக் குடும்பங்கள் உள்ளன. இவற்றை 100 இற்கும் மேற்பட்ட கிரகங்கள் சுற்றிவருவதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தக் கிரகங்களின் 2 கிரகங்களின் ஒளிவீச்சையும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அவர்கள் தொலைநோக்கு கருவிமூலம் இதைப் பார்த்தனர்.

இதனால் மகிழ்ச்சியடைந்த விஞ்ஞானிகள் தொலைதூர உலகங்களைப் பற்றிய ஆராச்சியில் புதிய சகாப்தம் தொடங்கியிருப்பதாகத் தெரிவித்தனர். சூரிய குடும்பத்தை சேராத கிரகங்களின் ஒளியைப் பார்ப்பது இது தான் முதல்முறை ஆகும். இந்த ஒளியைக் கண்டுபிடித்ததைத் தொடர்ந்து தொலைதூர கிரகங்களை நேரடியாக அளவிடமுடியும், ஒப்பிடமுடியும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.


கடந்த 10 ஆண்டுகளாக பிறகுடும்பத்துக் கிரகங்களின் ஒளியைத் தேடி வந்தோம். இப்போது தான் அதைப் பார்க்கமுடிந்தது என்று ஹவார்ட் ஆஸ்ட்ரோ பிசிக்ஸ் கானஸ்மித்சோனியன் மையத்தைச்சேர்ந்த விஞ்ஞானி டேவிட் சார்பொன்னா கூறினார்.

100 இற்கும் மேற்பட்ட கிரகங்கள் இருப்பதாகக்கூறப்பட்டாலும், எதையும் விஞ்ஞானிகள் நேரடியாகப் பார்த்தது கிடையாது. தற்போதுதான் அந்தக் கிரகங்களின் ஒளியைக் கண்டறிந்ததன் மூலம் 2 கிரகங்கள் இருப்பதை உணரமுடிந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது -

ஸ்பிட்சர்ஸ்பேஸ் தொலைநோக்கி தான் இந்த ஒளிவீச்சைக் கண்டுபிடித்தது.

இந்த 2 கிரகங்களும் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டவைதான். சூரிய குடும்பத்து வியாழன் கிரகத்தைப் போல பெரியவை கியாசால் ஆனவை. ஆனால், அவை எந்த நட்சத்திரத்தைச் சேர்ந்தனவோ அந்த நட்சத்திங்களுக்கு அருகே சுற்றி வருபவை.




பூமியில் இருந்து நூற்றுக்கணக்கான ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் உள்ள கிரகங்களின் தட்பவெப்ப நிலை, வளிமண்டலம் ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்ளக்கூடிய கருவி ஸ்பிட்சர் தொலைநோக்கியில் உள்ளதென அவர் தெரிவித்தார்.

# அந்தமானில் நிலநடுக்கம்

அந்தமானில் நேற்றுக்காலை 7.05 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் கட்டடங்கள் இலேசாக அதிர்வடைந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுக் காலை ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் 6.4 ரிக்டர் அளவில் பதிவாகியிருந்தது. இந்த நிலநடுக்கத்தால் சேதம் எதுவும் ஏற்பட்டதாகத் தகவல் எதுவும் வெளிவரவில்லை. ஆனால், இங்கு வாழும் மக்கள் சுனாமி ஏற்படுமோ என்ற அச்சத்தில் உள்ளனர்.

இதேவேளை - இந்தோனேஷியாவின் வடக்கு சுமாத்ரா பகுதியிலும் நேற்று அதிகாலை 1.35 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் இது 5.9 புள்ளிகளாகப் பதிவாகியிருந்தது.

சுமாத்ரா தீவில் 42.5 கிலோமீற்றர் ஆழத்தில் இது மையம் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல் 11 பொலிஸார் பலி;14 பேர் காயம்!

ஈராக்கின் மமாடி நகரில் அமைந்துள்ள பொலிஸாரின் சோதனைச் சாவடி மீது கிளர்ச்சிவாதிகள் நடத்திய கார்க்குண்டுத் தற்கொலைத் தாக்குதலில் 11 பொலிஸார் கொல்லப்பட்டனர்.

நேற்று மாலை நடந்த இந்தச் சம்பவத்தில் இரண்டு அமெரிக்கப் படையினர் உட்பட 14 பேர் காயமடைந்தனர்.

தாக்குதலுக்குள்ளான இந்தச் சோதனை சாவடி கடந்த மாதமே அமைக்கப்பட்டது. இதற்குக் காரணம் வெளியிலிருந்து நகருக்குள் கிளர்ச்சிவாதிகளால் நடத்தப்படும் தாக்குதல்களைத் தடுக்கவாகும். ஆனாலும், இந்தச் சோதனைச் சாவடி தற்போது கிளர்ச்சிவாதிகளின் பிரதான இலக்காக மாறியிருந்ததை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஈராக்கில் நடந்த தேர்தலையடுத்து, அங்கு அரசாங்கமொன்றை அமைப்பது குறித்த பேச்சுவார்த்தை அரசியல் கட்சிகளிடையே மிகவும் மெதுவான வேகத்திலேயே இடம்பெற்று வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டத்தையடுத்து கிர்கிஸ்தான் ஜனாதிபதி தப்பியோட்டம்!



(மொஸ்கோ)

முன்னாள் சோவியத் குடியரசில் ஒன்றாக இருந்து பின்னர் தனியாகப் பிரிந்த நாடுகளில் ஒன்றான கிர்கிஸ்தானில் அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கடந்த ஒரு வாரமாக நடத்திய ஆர்ப்பாட்டத்தையடுத்து அந்தநாட்டு ஜனாதிபதி தனது குடும்பத்துடன் நாட்டைவிட்டுத் தப்பியோடி அருகிலுள்ள கஸகஸ்தானில் தஞ்சமடைந்துள்ளார்.

கடந்த மாதம் கிர்கிஸ்தானில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இதில் ஆளும்கட்சி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதுடன் - ஜனாதிபதி ஆஸ்கர் அகாயேவின் மகன் மற்றும் மகள் ஆகிய இருவரும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால், இந்தத் தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியதுடன், நடந்துமுடிந்த தேர்தலை ரத்துச்செய்வதுடன் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிவிலக வேண்டுமெனவும் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. இதன் உச்சக்கட்டமாக நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சி ஆதரவாளர்களால் அரச அலுவலகங்கள் தீவைத்துக் கொளுத்தப்பட்டதுடன், அரச தொலைக்காட்சி நிலையம் உட்பட முக்கிய அரச அலுவலகங்களையும் கைப்பற்றினர்.

அத்துடன் ஜனாதிபதி அகாயேவினால் 2000 ஆம் ஆண்டுமுதல் சிறை வைக்கப்பட்டிருந்த துணை ஜனாதிபதி உட்பட எதிர்க்கட்சிகளின் முக்கிய பிரமுகர்களையும் விடுவித்தனர்.

இந்த நிலையில் எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டம் வலுவடைந்த நிலையில் பிரதமர் நிக்கோலாய் தான் சாயேவ் தனது பதவியிலிருந்து விலகினார். ஜனாதிபதி ஆஸ்கர் அகாயேவ் தனது குடும்பத்துடன் அருகிலுள்ள



கஸகஸ்தானுக்குத் தப்பிச்சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் இஷினாபாய் காதிர் பெகோ - கிர்கிஸ்தான் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் பாதுகாப்புத்துறை அமைச்சராக பெலிக்ஸ் குருலோவ், உள்துறை அமைச்சராக குர்மான் பெக் பகியேவ் ஆகியோரும் எதிர்க்கட்சிகளால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே எதிர்க்கட்சி ஆதரவாளர்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் ஓய்ந்து தற்போது கிர்கிஸ்தான் வழமை நிலைக்குத் திரும்பிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.




## பெண்கள் வலுவூட்டல் சமூக அமைச்சில்

பெண்கள் வலுவூட்டல் சமூக நல அமைச்சின் கீழ்க்காணும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமை கொண்ட விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அபிவிருத்தி உதவியாளர், இடர்முகாமை அபிவிருத்தி உதவியாயாளர், கணினி இயக்குனர், முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உதவியாளர் உளவளத்துறை உதவியாளர், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித் தகைமையாக, தாம் தெரிவு செய்யும் பதவி வெற்றிடத்துடன் தொடர்புடைய பாடம் ஒன்றை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி 18 வயதுக்குக் குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருப்பதுடன் - நேர்முகத் தேர்வில் பெற்றுக் கொள்ளப்படும் புள்ளி அடிப்படையிலேயே தெரிவு செய்யப்படுவார். விண்ணப்பதாரி விண்ணப்பப்படிவத்தின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2005-04-15 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கக்கூடியவாறு -

தொடர் இல 1 - 7 வரை, செயலாளர், பெண்கள் வலுவூட்டல், சமூகநல அமைச்சு, 5 ஆம் மாடி, செத் சிறிபாய், பத்தரமுல்ல என்ற முகவரிக்கும்,

தொடர் இல 8- 9 வரை மேலதிக செயலாளர், பெண்கள் வலுவூட்டல் பிரிவு, இல - 177 நாவல வீதி, நாரஹென்பிற்ற, கொழும்பு - 05 என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்கவேண்டும்.

## நகர அபிவிருத்தி நீர்விநியோக அமைச்சில்

நகரஅபிவிருத்தி நீர் விநியோக அமைச்சு பின்வரும் வெற்றிடங்களுக்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

பிரதித்திட்டப் பணிப்பாளர், பிரதானபொறியியலாளர், சிரேஷ்ட பொறியிலாளர், பொறியியலாளர், பொறியியல் உதவியாளர், திட்டக்கணக்காளர், கணக்கியல் உதவியாளர்ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித்தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பீ.எஸ்.சி.பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.

உயர் தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையிலேயே விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தெரிவுசெய்யப்படுவர்.

கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள், அனுபவம், கடந்த காலச் சேவைகள் போன்றவற்றின் பிரதியுடன் தமது சுயதரவுகள் அடங்கிய விண்ணப்பங்களை 2005-03-31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் - மேலதிக பொதுமுகாமையாளர், வெளிநாட்டினால் நிதியிடப்பட்ட திட்டப் பிரிவு, தேசிய நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்பு சபை கால வீதி, இரத்மலானை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

# முஷாரப்புடன் இணைந்து ஒருநாள் கிரிக்கெட் போட்டியை பார்க்கவுள்ள மன்மோகன் சிங்



(புதுடெல்கி)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம்செய்து விளையாடிவருகிறது. இந்தப் போட்டித் தொடரின் ஏதாவது ஒரு ஆட்டத்தைக்காண பாகிஸ்தான் அதிபர் முஷராப் விருப்பம் தெரிவித்திருந்தார். இதையடுத்து அவருக்கு இந்திய அரசு அழைப்பு விடுத்தது.

கொச்சியில் நடைபெறவுள்ள ஒருநாள் போட்டியைக் காண முஷாரப் வரக்கூடும் என்று முதலில் தகவல்கள் வெளியாகின. ஆனால், முஷாரப்புக்கு வேறு முக்கிய பணிகள் இருந்ததால் அவரது கொச்சி வருகை கைவிடப்பட்டது.

இதையடுத்து இந்திய - பாகிஸ்தான் அணிகளிடையே டெல்கியில் ஏப்ரல் 17 ஆம் திகதி கடைசி ஆறாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியைக்காண முஷாரப் முடிவுசெய்தார். அதற்கான ஏற்பாடுகள் நடந்துவருகின்றன.

ஏப்ரல் 17 ஆம் திகதி காலையிலேயே முஷாரப் டெல்கி வந்துவிடுவார். விமான நிலையத்தில் அவருக்கு மத்திய அரசு உற்சாக வரவேற்புக் கொடுக்கும். பிறகு முஷாரப் நேரடியாக பெரோஷா கோட்லா மைதானத்துக்குச் சென்று போட்டியைப் பார்ப்பார்.

அவருடன் பிரதமர் மன்மோகன் சிங்கும் ஒன்றாக அமர்ந்து கிரிக்கெட் போட்டியைப் பார்ப்பார். சில மணி நேரம் மட்டுமே அவர்கள் மைதானத்தில் ஒன்றாக அமர்ந்து கிரிக்கெட் போட்டியைப் பார்த்து ரசிப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதற்கான நேர விபரம் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

பிரதமர் மன்மோகன் சிங் - அதிபர் முஷாரப் இருவரும் ஒன்றாக அமர்ந்து கிரிக்கெட் போட்டியைப் பார்ப்பார்களே தவிர, வேறு எந்தப் பேச்சுவார்த்தையிலும் அவர்கள் ஈடுபடமாட்டார்கள் என்று மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.

இது குறித்து மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கூறுகையில் -

மன்மோகன் சிங்கும் - முஷாரப்பும் கிரிக்கெட் போட்டி பற்றி மட்டும்தான் பேசுவார்கள். ராஜீய ரீதியில் வேறு எந்தப் பேச்சும் கிடையாது என்றார்.

போட்டிக்கிடையே அதிபர் முஷாரப்புக்கு மதிய விருந்தளிக்க பிரதமர் மன்மோகன் சிங் தீர்மானித்துள்ளார். அந்த விருந்த வழங்கும் நிகழ்ச்சி மைதானத்தில் நடைபெறுமா அல்லது வேறு இடத்தில் நடைபெறுமா என்பது இன்னும் முடிவுசெய்யப்படவில்லை.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் மும்மொழிகளிலும் நடைபெறும்!

(கொழும்பு)

நீதிமன்ற நடவடிக்கைகளில் நாட்டின் ஆட்சி மொழிகளான சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் இருக்க வேண்டும் என்று நாடாளுமன்றம் வலியுறுத்தியுள்ளது.

அரச கொறடாவும் வர்த்தகத் துறை அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே இது தொடர்பாக பிரச்சினையை நாடாளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

தலைமை நீதிமன்ற நடைமுறைகள் ஆங்கிலத்தில் இருப்பதால் மக்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மொழிச்சிக்கலை எதிர்நோக்க வேண்டியிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சி கொறாடா மகிந்த சமரசிங்கவும் இப்பிரச்சினையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசுடன் ஒத்துழைப்பதாகவும் நீதிமன்ற நடைமுறைகளை மும்மொழியிலும் நடைமுறைப்படுத்த கோரும் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இது குறித்துப் பதிலளித்த சபாநாயகர் லொக்குபண்டார இப்பிரச்சினையை நீதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவதாகக் கூறினார்.

## நுரைச்சோலை மின் திட்டம் சீனப் பிரதமருடன் ஒப்பந்தம்!

(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தித் திட்டம் குறித்து அடுத்த மாதம் இலங்கை வரும் சீனப் பிரதமருடன் உடன்பாடு கைச்சாத்திடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நுரைச்சோலை அனல் மின் திட்டத்துக்கு உதவி வழங்க சீன அரசாங்கம் இணக்கம் தெரிவித்தது.

இந்த விடயம் தொடர்பான முதற்கட்டப் பேச்சுக்கள் முதலீடு, கைத்தொழில், சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவுக்கும் ஐந்துபேர் கொண்ட உயரதிகாரிகள் குழுவுக்கும் இடையில் நடைபெற்றன.

இந்தத் திட்டத்தை நடை முறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா அமைச்சரவைப் பத்திரம் மூலம் அனுமதி வழங்கியுள்ளார்.

நுரைச்சோலை அனல் மின் திட்டத்துக்கு சீன தேசிய இயந்திர மற்றும் கருவிகள் இறக்குமதி, ஏற்றுமதி கூட்டுத்தாபனம் முக்கிய முதலீட்டாளராக இருக்கும் எனத் தெரியவருகிறது.

இந்தத் திட்டத்துக்கு சீன உதவி பெறுவது தொடர்பாக எதிர்வரும் 7 ஆம் திகதி சீனப் பிரதமர் ருவான் ஜியா போவின் கொழும்பு வருகையின்போது உடன்பாடு கைச்சாத்திடப்படும்.

## சுனாமி பொதுக்கட்டமைப்பு...

தெரிந்துகொண்ட பின்னர் - முன்னணியிலுள்ள மற்றைய கட்சிகளுக்கும் இதுபற்றித் தெளிவுபடுத்த வேண்டும்.

தமிழ்நாடொன்று அமைப்பதற்காக யுத்தம் புரிந்த விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடல் மூலம் சமஷ்டி அரசியல் தீர்வினை ஏற்படுத்திக்கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொண்டு வருவதற்கிடையில் வடக்கு - கிழக்கில் அவசர மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக இடைக்கால நிர்வாகசபையொன்றை விடுதலைப் புலிகள் கோரிநின்றனர்.

சுனாமியின் பின்னர் விடுதலைப் புலிகள், வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் புனர்நிர்மானம் செய்வதற்காக, அரசு மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் அடங்கிய பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்க உடன்பட்டுள்ளனர். எனவே, இவ்வாறு அமைக்கப்படும் கட்டமைப்பு, இடைக்கால நிர்வாக சபையோ அல்லது நிர்வாகத்தைத் தீங்கு விளைவிக்கக்கூடியதோ அல்ல. இது குறித்து எவ்வித அச்சமும் அடையத் தேவையில்லை.

எனவே, எதிர்காலத்தில் ஏற்படவுள்ளவை குறித்து நன்றாக விளங்கிக்கொள்ள வேண்டும். தனிநாட்டுக்காகப் போராடிய விடுதலைப் புலிகள், தற்போது கீழிறங்கி வந்துள்ளனர் எனவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார். (தே)

## பொதுக்கட்டமைப்பு முயற்சி...

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. சர்வதேச சமூகம் விரும்புவது போல பொதுக்கட்டமைப்பு விரைவில் உருவாக்கப்படலாம்.

பொதுக்கட்டமைப்பு உருவாக்குவது தொடர்பாக ஜே.வி.பியின் நிலைப்பாடு தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. தற்போதைய நிலைப்பாட்டில் அவர் தமது எதிர்ப்பைத் வெளிப்படுத்தி வருகின்றனர். இதே எதிர்ப்பையே அவர்கள் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்ட பின்னரும் தெரிவிப்பார்களா என்பதும் எனக்குத் தெரியாது.

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்குவதற்காக பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் தற்போது முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த முயற்சி முன்னேற்றகரமானதாகவே செல்கிறது. எவ்விதத்திலும் பின்நோக்கிச் செல்லவில்லையெனத் தெரிவித்தார்.

## தகுந்த பதவி வழங்கி....

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் என்னை இரண்டு வருட விடுமுறையிலேயே கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு மாற்றினார். ஆனால், அதனை கிழக்குப் பல்கலைக்கழகம் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆறுமாத காலத்துக்கே எனக்குப் பணியாற்ற அனுமதிக்கப்பட்டது. அந்தப் பணிக்காலம் முடிவடைந்து விட்டது. மீண்டும் ஆறு மாத காலம் பணியாற்ற அனுமதி தருவதாகக் கூறப்படுகின்றது. ஆனாலும் பேச்சளவில் மட்டுமே அது உள்ளது.

மருத்துவ பீடத்தை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கட்டியெழுப்பக் கூடிய ஒரு நிலையிலேயே நான் அங்கு செல்லத் தயாராக இருக்கின்றேன்.

அதைவிட்டு சாதாரணமாக அங்கு செல்வதால் எந்தப் பலனும் கிடையாது. அத்துடன், எனது வருகை தொடர்பாக கிழக்குப் பல்கலைக்கழகம் இதுவரை சாதகமான முடிவு எதனையும் தரவில்லை. எல்லாமே வாய்ப்பேச்சளவில் தான் உள்ளது.

எது எவ்வாறாயினும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தகுந்த பதவி வழங்கப்பட்டாலேயே அங்கு செல்ல முடியும்.

இல்லையேல் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் எனது மக்களுக்கு நான் பணியாற்றுவேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையை

# சீர்குலைக்கும் சக்திகளுக்கு நாம் இடமளிக்க முடியாது!

### மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர்

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை முறியடிக்க முனையும் எந்தச் சக்திக்கும் இடமளிக்க முடியாது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் தெரிவித்தார்.

கொக்கட்டிச்சோலையிலுள்ள விடுதலைப் புலிகளின் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் அறிமுக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

தமிழ் - முஸ்லிம் ஒற்றுமைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் ஓரிரு சம்பவங்கள் அண்மையில் நடைபெற்றுள்ளன.

இத்தகைய சதி நடவடிக்கைகளை முறியடிப்பதற்கு பத்திரிகையாளர்களின் ஒத்துழைப்புத் தேவையாகும்.

தமிழ் - முஸ்லிம் இனங்களிடையே உறவை வலுப்படுத்துவதற்காக அண்மைக் காலங்களில் விடுதலைப் புலிகளுக்கும் - முஸ்லிம் சமூக பிரதிநிதிகளுக்குமிடையில் நடைபெற்று வருகின்ற சந்திப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமே, ஏற்கனவே இடம்பெயர்ந்திருந்த முஸ்லிம்கள் தற்போது தங்கள் சொந்தக் காணிகளில் மீளக் குடியேறக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த உறவை முறியடிப்பதற்கு எந்தவொரு சக்திக்கும் இடமளிக்க முடியாது.

அண்மையில் ஏற்பட்ட ஓரிரு சம்பவங்கள் தொடர்பாக முஸ்லிம் சமூக பிரதிநிதிகளை மீண்டும் சந்தித்து உரையாடவிருக்கின்றோம்.

இது பற்றி முஸ்லிம் சமாதான செயலகத்தின் இணைப்பாளர் யு.எல்.எம்.முபீன் ஊடாக அறிவித்துள்ளோம். முஸ்லிம்களின் காணி தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

## கைக்குண்டு வெடித்து ஒருவர் உயிரிழப்பு!

(கொழும்பு)

இரத்தினபுரி பிரதேசத்திலுள்ள மாவனல்ல பொலிஸ் காவலரணுக்கு அருகில் கைக்குண்டு ஒன்று வெடித்த சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

சிவனொளிபாத மலைக்குச் செல்லும் வழியிலுள்ள காவலரணில் பயணிகள் இறக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டபோதே இந்தக் கைக்குண்டு வெடித்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கைக்குண்டைக் கொண்டுவந்தவர் எனத் தெரியவருகிறது.

இந்தக் குண்டுவெடிப்புக் காரணமாக பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட மேலும் மூன்று பேர் காயமடைந்தனர்.

## அநாதரவான...

அறிவுறுத்தலுக்கு அமைய கெய்ரோவில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு அதிகாரிகள் இருவர் குறிப்பிட்ட இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றனர்.

மேற்படி 137 பேரும் தம்மை இலங்கையர்கள் என்று கூறியிருக்கின்றபோதும், உண்மையில் அவர்கள் இலங்கையர்கள் தானா என்று இந்த அதிகாரிகள் ஆராயவுள்ளனர்.

இலங்கையர்கள் என்று இவர்கள் உறுதிப்படுத்தினால் எகிப்திய அதிகாரிகளின் உதவியுடன் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பாக கெய்ரோவிலுள்ள இலங்கைத் தூதரகத்தினூடாக எகிப்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடன் தொடர்புகளை மேற்கொண்டு வருவதாகவும் வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவித்தன.

## சத்திர சிகிச்சை...

எமக்குத் தெரிவித்தார். இதற்கமைய இங்கு முறைப்படி நியமனம் ஒன்றை மேற்கொள்ள கால அவகாசம் தேவை. ஆகக் கூடியது இரண்டரை மாதங்களாவது தேவை.

மருத்துவ பீடாதிபதி சிவபாலன் தனது பதவியை இராஜினாமா செய்வதாகத் தெரிவித்திருந்தார். ஆனால், இதனை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவரும் மருத்துவ பீடாதிபதியைத் தொடர்ந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொண்டதாகவும் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் மேலும் தெரிவித்தார்.

## பொதுக்கட்டமைப்பு உடன்பாடு இதுவரை தயாரிக்கப்படவில்லை!

### அமைச்சர் மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

சுனாமியால் அழிவடைந்த வடக்கு - கிழக்குப் பிரதேசங்களை மீளவும் கட்டியெழுப்புவதற்கு விடுதலைப்புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பு உடன்பாடு இதுவரை தயாரிக்கவில்லையெனவும், இந்தக் கட்டமைப்பில் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்களை ஆராய்ந்து பார்த்த பின்னர் அவை நாட்டிற்குப் பாதகமானதெனில், அது செயற்படுத்தப்படமாட்டாது எனவும், மகாவலி அபிவிருத்தி ஆற்றுப்படுக்கை மற்றும் ராஜரட்டை அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரி வித்தார்.

திருமலையில் நந்தரட்ட தேரரின் உண்ணாவிரதத்தை முடித்து வைப்பதற்காக ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் நேற்று முன்தினம் அங்கு சென்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

திருமலை உட்பட சுனாமியால் அழிவுகளுக்குள்ளான பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்க கட்சி நடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்று வருகின்றது. திருமலையை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக அரசசார்பற்றநிறுவனங்களுடன் 10 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடுகளை அமைக்கும் பணி இன்றிலிருந்து ஆரம்பிக்கப்படும். 100 மீற்றர் எல்லைப்பிரச்சனை திருமலையில் மாத்திரமல்லாது ஏனைய மாவட்டங்களிலும் தோன்றியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (தே)

## 13 அகதிகள் தாயகம் திரும்பினர்

தமிழ்நாட்டிலிருந்து மேலும் 13 ஈழத்தமிழ் அகதிகள் நேற்றுக்காலை தலைமன்னார் கரையை வந்தடைந்தனர். மணற்திட்டியொன்றில் படகோட்டிகளால் இறக்கிவிடப்பட்ட இவர்கள் கடற்படையினரால் மீட்கப்பட்டு தலைமன்னார் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

மனனார் மாவட்ட நீதிமன்ற உத்தரவின் பேரில் இவர்கள் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை யுத்திநிறுத்த உடன்படிக்கைக்குப் பின்பு கடல் வழியாக 3100 குடும்பங்களைச் சோந்த ஈழத்தமிழ் அகதிகள் தாயகம் திரும்பியிருப்பதாகத் தெரியவருகிறது.

இவர்களில் 1500 குடும்பங்கள் பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என மன்னார் பிரதேச செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

அவரது தகவலின்படி இந்தவருடம் பிற மாவட்டங்களைச் சேர்ந்த 16 குடும்பங்கள் உட்பட 80 குடும்பங்கள் இவ்வாறு நாடுதிரும்பியதாகவும் தெரியவருகிறது.

## சுவர் வீழ்ந்து காயமுற்ற இளைஞன் உயிரிழப்பு!

(யாழ்ப்பாணம்)

வீட்டு மதில் இடிந்து வீழ்ந்ததில் அதனுள் நசியுண்டு படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்றுக்காலை உயிரிழந்தார்.

கொக்குவில் கேணியடியைச் சேர்ந்த இரத்தினம் ரவிக்குமார் (வயது 19) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

கடந்த புதன்கிழமை இரவு 7.30 மணிக்கு சுற்றுமதிலில் ஏறமுற்பட்டவேளை மதில் இடிந்து விழுந்ததில் அதனுள் நசியுண்ட இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். தலைப்பகுதியில் பலத்த காயமடைந்திருந்த இளைஞனுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்றுக்காலை அவர் உயிரிழந்தார்.

## மரண அறிவித்தல்



### இரத்தினம் ரவிக்குமார் (ரவி)

கேணியடி, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த இரத்தினம் ரவிக்குமார் (ரவி) அவர்கள் நேற்று அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் இரத்தினம் இந்திராதேவி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற ரஞ்சித்குமார் மற்றும் ராஜினி, ராஜ்குமார் (டோஹா), அசோக்குமார் (பிரான்ஸ்), ரதீஸ்குமார், ராஜிகா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கனகரட்ணம் (சாத்திரியார்), பரமேஸ்வரி காலஞ்சென்ற நடராசா, செல்லக்கிளி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று சனிக்கிழமை (26.03.2005) பிற்பகல் 4.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கேணியடி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

தகவல் :
எஸ்.கவிதன் *(சகோதரன்)*

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.03.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மாணவர் பேரவை அலுவலகத்தில் கணினிப் பயிற்சி நிலையம் திறப்பு!



சர்வதேச மாணவர் பேரவையால் பரமேஸ்வரா சந்தியில் உள்ள அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் கணினி கற்கை நிலையமொன்று திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை பேராசிரியர் என்.சண்முகலிங்கம், மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழ தேசியக் கொடியை மாணவர் அமைப்பைச் சேர்ந்த சி.நளன் ஏற்றிவைத்தார்.

கணினி கற்கை நிலையத்தின் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி திறந்து வைத்தார். கணினிக் கற்கை நிலையத்தை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான இரசாயனவியல்துறை தலைவர் கலாநிதி செந்தில்நந்தனன் திறந்து வைத்தார்.

சிறப்புரைகளை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி மற்றும் யாழ்.பல்கலைக்கழக பொருளியல்துறைத் தலைவர் வி.பி.சிவநாதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

# ரெலிகொம் பிராந்திய நிலையத்தில் புதிய ஆழி பொருத்த நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா ரெலிகொமின் யாழ். பிராந்திய நிலையம் அதன் சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கில் இந்த வருடம் பல வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாக ரெலிகொமின் யாழ்.பிராந்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் ஒரு கட்டமாக யாழ்.பிராந்திய நிலையத்திலுள்ள ஆழியை மாற்றுவதற்குத் தலைமையகத்திலிருந்து அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், இந்த ஆழியை மாற்றத் திட்டமிட்டு அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு நிதி தேவைப்படுவதால் - நிதி கிடைத்ததும் இந்த வருடத்துக்குள் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். இதேவேளை, சுன்னாகத்திலுள்ள பரிமாற்றல் கருவியை மாற்றும் வேலைத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திட்டங்கள் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டதும், குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சீரான தொலைபேசிச் சேவைகளை வழங்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# போராட்டங்களில் மாணவர்கள்; விளக்கம் கோருகிறார் படைத்தளபதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் முன்னெடுக்கப்படுகின்ற வெகுஜனப் போராட்டங்களில் சீருடையில் பாடசாலை மாணவர்கள் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுகின்றமை தொடர்பாக தமக்கு விளக்கமளிக்கவேண்டுமென யாழ். படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக பலாலி இராணுவத் தலைமையகத்திலிருந்து மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனின் ஒப்பத்துடன் கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அண்மைக்காலங்களில் யாழ்.நகரப் பகுதியில் இடம்பெற்ற கண்டனப் பேரணிகளில் பாடசாலை மாணவ மாணவிகள் சீருடையில் பாடசாலை நேரத்தில் கலந்துகொண்டமை தொடர்பாகவே அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலைகள் சிலவற்றின் பெயர் குறிப்பிடப்பட்டு அப்பாடசாலை மாணவர்களே இந்தப் பேரணியில் கலந்துகொண்டதாகக் குறிப்பிட்டு அந்தக் கடிதத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## இல்ல மெய்வன்மை போட்டி

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் க.ஜெகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட வைத்திய கலாநிதி ஆர்.இராஜேந்திர பிரசாத்தும், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ம.மாதுளனும், சிறப்பு விருந்தினராக யாழ்.மானிப்பாய் இந்துக் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியை திருமதி கி.பவசிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (44)

# நீண்டகாலம் திருத்தப்படாத நிலையில் அரியாலை - இலந்தைக்குளம் பாலம்

(அரியாலை)

அரியாலைக்கும் - கொழும்புத்துறைக்கும் இடைப்பட்ட இலந்தைக்குளம் பாலம் மிகவும் மோசமாக சேதமடைந்து காணப்படுவதால், இதனூடாகப் பயணம் செய்வதில் சிரமங்கள் ஏற்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்தனர்.

அரியாலை - மாம்பழம் சந்தியிலிருந்து கொழும்புத்துறைக்கு செல்லும் பகுதியில் இலந்தைக்குளம் பிள்ளையார் கோவிலில் இந்தப் பாலம் அமைந்துள்ளது.

இந்தப் பாலத்தின் நடுவில் பாரிய குழியொன்று ஏற்பட்டுள்ளது. இதனால் அதன் இரு பக்கங்களையும் மக்கள் போக்குவரத்துச் செய்ய பயன்படுத்துகின்றனர். எனினும் இது மிகவும் அபாயகரமானதாகவே இருக்கிறது. குறிப்பாக இரவு வேளைகளில் போக்குவரத்துச் செய்வது மிகவும் ஆபத்தானதாக உள்ளது.

இந்தப் பாலத்தின் நடுவில் குழி ஏற்பட்டு பல மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் இதைப் புனரமைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## மாதாந்த பொதுக்கூட்டம்

(நீர்வேலி)

நீர்வேலி சேவி கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர்களின் மாதாந்த பொதுக்கூட்டம் நாளை பகல் 11 மணியளவில், நீர்வேலி கந்தசுவாமி கோயில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும், தொழில் ஸ்தாபனத்தின் தொழில் அதிபரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

எனவே இதில் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சேவி கண்ணாடித் தொழிற்சாலை பாதிக்கப்பட்டோர் ஊழியர்களின் பொது அமைப்பு கேட்டுள்ளது.

## மாதா சொரூபம் பிரதிஷ்டை

(கொக்குவில்)

நாவாந்துறை கடற்கரை வீதி - பொம்மைவெளி வீதி ஒன்றிணையும் சந்தியில் மாதா சொரூபம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

'சமாதானத்தின் தாயே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்' என்னும் வாசகம் பீடத்தில் எழுதப்பட்டுள்ளது. (206)

## விசேட பொதுக்கூட்டம்

உயர் தேசிய கணக்கியல் வர்த்தக, முகாமைத்துவப் பட்டதாரிகள் சங்க விசேட பொதுக்கூட்டம் - இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவன பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்குத் தற்போது பட்டதாரி பயிற்சியில் ஈடுபட்டுள்ள உயர் தேசிய கணக்கியல், வர்த்தக முகாமைத்துவப் பட்டதாரிகளும் மற்றும் தற்போது நிறுவனத்திலிருந்து வெளியேறிய உயர் தேசிய கணக்கியல், வர்த்தக முகாமைத்துவ பட்டதாரிகளும் தவறாது சமுகமளிக்குமாறு உயர் தேசிய கணக்கியல், வர்த்தக முகாமைத்துவப் பட்டதாரிகள் சங்கத் தலைவர் வி.தயாபரன் கேட்டுள்ளார்.

அன்றையதினம் - பதிவுசெய்யப்படாத உயர் தேசிய கணக்கியல், வர்த்தக முகாமைத்துவப் பட்டதாரிகள் பதிவும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின்விநியோகப் பணிகளில் சரசாலைப் பகுதி புறக்கணிப்பு

சாவகச்சேரி - சரசாலைப் பகுதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. இது குறித்து இந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

சரசாலைப் பகுதிக்கு மின்சாரம் வழங்கவென மின்சாரசபையால் மின்கம்பங்கள் நாட்டப்பட்டபோதும், தொடர்ந்து ஏனைய வேலைகள் இடம்பெறாததன் காரணமாக - தொடர்ந்தும் மின்சாரம் வழங்கப்படாமலேயே இருக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக இந்தப் பகுதி, மின்சாரம் இல்லாமல் இருளிலேயே மூழ்கியுள்ளது.

இதனால் இந்தப் பகுதியில் வசிக்கும் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை சிறப்பான முறையில் மேற்கொள்ள முடியாதுள்ளனர். விளக்கு ஒளியிலேயே கற்கவேண்டியுள்ளது. அத்துடன் வீதிகளும் இருளில் மூழ்கிக் காணப்படுவதால் விபத்துச் சம்பவங்களும் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

சாவகச்சேரி பகுதியில் பல பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள போதும், சரசாலைப் பகுதிக்கு இதுவரையில் மின்சாரம் வழங்கப்படாது தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதால், இந்தப் பகுதி மக்கள் மிகவும் விசனம் அடைந்துள்ளனர்.

# நெல்லியடி நகர்ப் பகுதியில் மின்விளக்குகள் பொருத்த நடவழிக்கை

நெல்லியடி மத்திய பகுதியில் இரவுவேளை அடிக்கடி திருட்டுக்கள் இடம்பெறுவதும், வீதியோரங்களில் மது அருந்துவதும், தனியார் கல்வி நிலையங்களில் படித்துவிட்டுவரும் பெண்களுடன் சேஷ்டை செய்வதும் சர்வசாதாரணமாகிவிட்டது.

மின்சாரசபையால் பொருத்தப்பட்ட வீதி விளக்குகள் அடிக்கடி செயலிழந்துபோவதும், சீரான வெளிச்சமில்லாமல் இருப்பதும் சமூகவிரோதிகளுக்குச் சாதகமாக அமைந்துவிடுகின்றது.

அண்மையில் கரவெட்டி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்வுக்கமைவாக நெல்லியடி மத்திய நகர்ப்பகுதிக்கு சோடியம் மின்குமிழ்கள் நான்கு முக்கிய இடங்களில் பொருத்தப்படவுள்ளன.

இதற்கான மின்குமிழ்களை நெல்லியடி பிரதேசசபை- மின்சாரசபைக்குக் கொடுத்துதவ முன்வந்துள்ளது. மேலும் பழுதடைந்து காணப்படும் வீதி விளக்குகள் அனைத்தும் சீர் செய்யப்படுமென்று மின்சாரசபை உத்தியோகத்தர் உறுதியளித்துள்ளார். (13)

# யாழ். பல்கலைக்கழகத்தில் 'அஹஸ் கவ்வ' திரைக்காவியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைத் திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை முற்பகல் 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் தர்மசேன பத்திராஜவின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட 'அஹஸ் கவ்வ' (ஆகாய கங்கை) எனும் சிங்களத் திரைப்படம், ஆங்கிலத் துணைத்தலைப்புகளுடன் விடியோக் காட்சியாகக் காண்பிக்கப்படவுள்ளது.

திரைப்படக் காட்சியின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராசாவின் வழிநடத்தலில் - காண்பித்த படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது. ஆர்வலர்கள் எவரும் வருகை தந்து பயன்பெறமுடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.




வடமராட்சியில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பொலிகண்டி பிரதேசத்தில் குழந்தைகளுக்கான பால்மா, சவர்க்காரம், நுளம்புவலை ஆகியவற்றை வடமராட்சி லயன்ஸ் கழகப் பொறுப்பாளர் கே.தங்கராசா குழந்தையொன்றுக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம். (14)

# நெல்லியடிப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(நெல்லியடி)

நெல்லியடி பிரதேசத்திலுள்ள நெல்லியடி நகரப்பகுதி, வதிரிச்சந்தி, மாலி சந்தி, நாவலர்மடம் சந்தி, கீரிப்பல்லி வீதி, சம்பந்தர்கடை, சாமியன் அரசடி, இராச கிராமம், கோவில்சந்தைப் பகுதியில் எதிர்வரும் 28, 29, 30 ஆம் திகதிகளில் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டிக் கொல்லப்படவுள்ளதால் - தமது வளர்ப்பு நாய்களைக் கட்டிவைக்குமாறு நெல்லியடி பொது சுகாதாரப்பகுதி வேண்டுகோள் விடுத்துள்ளது.

# திண்மக் கழிவுகளை அகற்ற நடவடிக்கை!

(நெல்லியடி)

நெல்லியடி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதன்படி நாளை மறுதினம் திங்கட்கிழமை இசை கிராமம், அம்பம் மருத்துவமனை, பொன் கந்தையா வீதி, காளிகோயில் வீதி ஆகிய இடங்களிலும் - புதன்கிழமை மகாத்மா தியேட்டர் வீதி, ஆலங்கட்டை வீதியிலும் -

வியாழக்கிழமை மாலி சந்தி, பூந்தோட்டம், கோயில் சந்தை வீதி ஆகிய இடங்களிலும் திண்மக்கழிவுகள் அகற்றப்படவுள்ளன.

அன்றையதினம் மேற்குறிப்பிட்ட வீதிகளில் திண்மக்கழிவுகளை சேர்க்குமாறு பொது சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர்.

# முன்பள்ளிகளின் அபிவிருத்தி குறித்து துணுக்காயில் முக்கிய கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

முன்பள்ளிகளின் அபிவிருத்தி தொடர்பான வேலைத்திட்ட செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கோடு - கடந்த புதன்கிழமை காலை 10 மணியளவில் பாண்டியன்குளம், துணுக்காய் பிரதேச தமிழர் புனர்வாழ்வுக்கழக மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் மாந்தை கிழக்கு பிரதேசத் தலைவர் மா.கனகலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பாகவும், முன்பள்ளிச் சிறார்களின் கல்வி வளர்ச்சி தொடர்பாகவும், முன்பள்ளிகளின் அபிவிருத்தி தொடர்பாகவும் கருத்துப்பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

இந்தக் கலந்துரையாடல் நிகழ்வில் ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பணிப்பாளர் பாண்டியன் கருத்துத் தெரிவிக்கையில் -

முன்பள்ளிகளினதும், முன்பள்ளிச் சிறார்களினதும் அபிவிருத்திக்கு இந்தப் பிரதேசத்திலுள்ள முன்பள்ளிகளின் சிறார்களது பெற்றோர்களும், பொதுமக்களும் பங்காற்றவேண்டியது இன்றியமையாதது எனத் தெரிவித்தார்.

ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பணிப்பாளர் பாண்டியன், முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் இராமமூர்த்தி, பாண்டியன்குளப் பிரதேசப் பொறுப்பாளர் இலக்கியன், பாண்டியன்குள பங்குத்தந்தை உட்பட, முன்பள்ளிச் சிறார்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாள்ர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



வன்னிப் பதிவுகள்

## தேசிய விளையாட்டு விழாவில் வவுனியா மாணவர் தெரிவு

எதிர்வரும் ஜூன் மாதம் தம்புள்ளையில் நடைபெறவுள்ள 31 ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து 10 வீரர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இதில் ஆறு வீரர்கள் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என மாவட்ட விளையாட்டு அதிகாரி எஸ். அண்ணாத்துரை தெரிவித்தார்.

## உளவளத்துணை நிலையம் திறப்பு!

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் அக்கராயன் வைத்தியசாலைக்கு முன்பாக அமைக்கப்பட்ட, மனநிலை பாதிக்கப்பட்ட ஆண்களுக்கான சந்தோசம் உளவளத்துணை நிலையம் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது. (க)

## தமிழீழ காவல்துறையினரால் போக்குவரத்து தொடர்பான கருத்தரங்கு

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் போக்குவரத்து நடைமுறைகள் குறித்த விளக்கக் கருத்தரங்குகள் - தமிழீழ காவல்துறையினரால் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் கடந்த புதன்கிழமை புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை, றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், இரணைப்பாலை மகா வித்தியாலயம், உடையார்கட்டு மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கருத்தரங்குகள் இடம்பெற்றன.

இந்தக் கருத்தரங்குகளில் போக்குவரத்து குறித்த நடைமுறைகளை தமிழீழ காவல்துறையைச் சேர்ந்த பிரதீப்குமார், கிருபாகரன், குணராசா, யோகச்சந்திரன், அழகேஸ்வரி, ஹூத் மேரி ஆகியோர் எடுத்துக் கூறினர். (வெ)

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### மார்ச் -26

1837 : அவுஸ்ரேலிய பழங்குடியினரது குகை ஓவியங்களை சேர். ஜியார்த் கிரே கண்டுபிடித்து உலகறியச் செய்தார்.

1909 : ஈரானில் சட்டபூர்வமான அரசுக்கு எதிராக முகம்மது அலிஷா என்பவர் செய்த புரட்சிக்கு ஆதரவாக ரஷ்யப்படைகள் ஈரானின் வடபகுதியை ஆக்கிரமித்தன.

1917 : பிரிட்டனில் பெண்கள் தரைப்படை பயிற்சி முகாம் ஆரம்பிக்கப்பட்டது.

1934 : வாகனம் ஓட்டும் அனுமதிச் சான்றிதழ் பெற பரீட்சைகள் நடத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

1935 : ஹெலிகொப்டர்கள் முன்பே கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும், நிலையான வேகத்தில் சீராகப் பறக்கக்கூடிய ஹெலிகொப்டரது வெள்ளோட்டம்.

1936 : நாடாளுமன்ற நிகழ்ச்சிகளை நேரடியாக ஒளிபரப்பும் முறை முதன்முதலாக நியூஸிலாந்தில் அறிமுகம் செய்யப்பட்டது.

1953 : போலியோ எனப்படும் இளம்பிள்ளைவாத நோய்க்கு தடுப்பூசி மருந்து கண்டுபிடிக்கப்பட்டு விட்டதாக அமெரிக்க விஞ்ஞானி டொக்டர் ஜோன்ஸ் ஸக் அறிவித்தார்.

1971 : முஜிபுர் ரஹ்மான் பங்களாதேஷின் சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தினார். இந்த சுதந்திரத்துக்காக 10,00,000 இற்கு மேற்பட்ட வங்காளிகள் உயிரைக் கொடுத்திருந்தனர். ஒரு கோடிக்கும் அதிகமானவர்கள் இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர்.

தொகுப்பு - சந்துரு

## மருதங்கேணிப் பிரதேசத்தில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக பாதிக்கப்பட்டோருக்கு கொடுப்பனவு

(ஆழியவளை)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுனாமி அனர்த்தம் காரணமாக உறவுகள், உடமைகளை இழந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்குக் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக அரசாங்கத்தால் வழங்கப்படும் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சமையல் பாத்திரங்கள் வாங்குவதற்கு 2 ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் கிராம அலுவலர் ரீதியாக வழங்கப்பட்டு வருகின்றன.

உலர் உணவு முத்திரை வழங்கப்பட்டு, அதற்குரிய பொருட்கள் வடமராட்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினூடாக வழங்கப்பட்டு வருகிறது.

கிராம அலுவலர் ரீதியாக தற்காலிக அமைவிடங்கள் அமைக்கப்பட்டு வருவதுடன், ஒரு தொகுதி குடிசைகள் மக்கள் குடியிருப்பதற்கு வழங்கப்பட்டுள்ளன. (122)

# கோயிற்புளியங்குளம் பிரதேசத்தில் தற்காலிக கொட்டகையில் பாடசாலை

'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையின்போது படையினரால் கைப்பற்றப்பட்டு 'ஓயாத அலைகள் - 3' மூலம் மீட்கப்பட்ட நெடுங்கேணி பிரதேசத்தின் கோயிற்புளியங்குளம் மீள்குடியேற் றக் கிராமத்தில் நீண்ட காலத்துக்குப் பின்னர் போரூட் நிறுவனத்தின் உதவியுடன் - தமிழீழ கல்விக்கழகத்தினராலும், கல்விப் பணிமனையிராலும், கிராம மக்களாலும் தற்காலிக கொட்டகையால் அமைக்கப்பட்ட பாடசாலை கடந்த புதன்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு - பட்டடைபிரித்தகுளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் வோ.விமல்ராஜ் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை வவுனியா மாவட்ட தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் ஞானம் ஏற்றி வைத்தார்.

தமிழீழத் தேசியக்கொடியை வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் ஏற்றி வைத்தார். தொடர்ந்து பாடசாலைக் கொட்டகையின் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சிறப்புரைகளை நெடுங்கேணி கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.இந்திரராஜா, வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர், வவுனியா மாவட்ட தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர், பட்டிக்குடியிருப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் ஆகியோர் நிகழ்த்தினர். (03)





கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

# தாண்டிக்குளம் மிரமண்டு வித்தியாலயத்தில் கண்ணிவெடிகள் முற்றாக அகற்றப்பட்டுள்ளன

வவுனியா, தாண்டிக்குளம் மிரமண்டு வித்தியாலய மைதானம் உட்பட, பாடசாலைக் காணியினுள் புதையுண்டு இருந்த சகல வெடிபொருட்களும் முற்றாக அகற்றப்பட்டுவிட்டதாக வெடிபொருட்களை அகற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் வவுனியா மாவட்ட திட்ட இணைப்பாளர் மைக்கல் பிரான்ஸ் தெரிவித்தார்.

சுவிஸ் கண்ணிவெடி அகற்றும் மன்றத்தினரால் துப்புரவுப் பணிகள் கடந்த ஆண்டு பூர்த்திசெய்யப்பட்ட போதிலும், அவர்களுக்குரிய சான்றிதழ்கள் நேற்றுமுன்தினம் வைபவ ரீதியாக வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தாண்டிக்குளம் பாடசாலைக் காணியிலிருந்து ஒரு சக்திமிக்க கண்ணிவெடி உட்பட, வெடிக்காத நிலையிலிருந்த 1,427 வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளன. இதன்மூலம் 4 ஆயிரத்து 978 சதுரமீற்றர் நிலப்பரப்பு துப்புரவு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது. மாவட்ட அரச அதிபர் சி.சண்முகம், வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.ஆர்.ஏ.ஒஸ்வோல்ட், எவ்.எஸ்.டி இயக்குநர் மார்க் பரணியோ, எப்.எஸ்.டி தேசிய செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.எஸ். ஜெயபாலன் உட்பட - வவுனியாவில் கண்ணிவெடிகளை அகற்றும் ஏனைய மன்றங்களுடைய பிரதிநிதிகள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் இதில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, வவுனியாவில் யுத்தகாலத்தில் புதையுண்டுள்ள வெடிபொருட்களை அகற்றும் பணியில் பல வெளிநாட்டு மன்றங்கள் செயற்பட்டு வருகின்றமையும், உள்நாட்டு மனிதவழங்களும் பயன்படுத்தப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி - தட்டுவன்கொட்டியில் ஜி.ரி.இசற்றால் அபிவிருத்திப் பணிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - தட்டுவன்கொட்டி கிராமம் ஜி.ரி.இசற் நிறுவனத்தின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் மாதிரிக் கிராமமாகத் தெரிவுசெய்யப்பட்டு, அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1990 ஆம் ஆண்டுமுதல் படையினரின் ஆக்கிரமிப்பில் இருந்த இந்தக் கிராமம் 'ஓயாத அலைகள் - 3' படை நடவடிக்கை மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளால் வெற்றிகொள்ளப்பட்டதையடுத்து, கிராம மக்களை மீளக்குடியமர்த்தும் நோக்கில் ஜி.ரி. இசற் நிறுவன நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நிரந்தர வீடுகள், கழிப்பறைகள் அமைக்கப்பட்டு - குடிநீர் விநியோகம், வீதிப் புனரமைப்பு என்பன துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, இந்த மாதிரிக் கிராமத்தை இந்தமாத இறுதியில் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும், சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் சென்றமையால், குடியிருப்பு வேலைகள் தாமதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.